போன் நெ: 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 28—2—54 | இதழ் 35

மாறுதல் ஏற்படுமா?

இன்றைய அரசியல் தலைவர்கள்—ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருப்பவர்கள், பெரும்பாலும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் கருவியாக மதத்தையே பயன்படுத்துவதைக் காண்கிறோம். மதத்தையும், அதன் பாதுகாவலரான கடவுளையும், மக்கள் முன்னிலையில் சாட்சியாக வைத்துத் தங்கள் காரியங்களை எளிதில் சாதித்துக்கொள்ளும் தற்காலிக ஏற்பாட்டுக்கு, இக்கட்டுரை, நல்ல பதிலளிக்குமென்று கருதுகிறோம்.

மனிதனுக்குச் சுயமரியாதை வேண்டும், தனக்குத்தானே உதவி என்ற தன்மதிப்பு வேண்டும். வேதாகமங்களைப் படிப்பது, மனிதனுக்குக் குளிர்காலப் பனியை விலக்க உதவி புரியாது. ஆனால், வீடுகளும், நெருப்பும், ஆடைகளும் துணைபுரியும். ஒருதரம் நிலங்களை உழுது போடுவது, ஆயிரம் மத உபதேசங்களைக் காட்டிலும் பஞ்சத்தைப் போக்குவதற்கு உற்ற துணை. உலகம் தோன்றிய காலம்முதல் செய்த பிரார்த்தனைகள் அவ்வளவையும்விட, அருமையான மருந்துகள் ஆயிரக்கணக்கான வியாதிகளைப் போக்குவதற்கு உதவும்.

மனிதன், இயற்கையைவிட வேறானதும் அதிக வலிமையானதுமான ஒரு சக்தி இருப்பதாக நம்பிக்கொண்டே இருக்கிறான். இன்னும் சடங்குகளாலும், உபசாரணைகளாலும், பிரார்த்தனைகளாலும், ஆராதனைகளாலும், தியாகங்களாலும், பயத்தினாலும், அயோக்கியத்தனங்களாலும் அதன் உதவியைப் பெற முயன்றுகொண்டிருக்கிறான். இருளடர்ந்து மருண்டு கிடக்கும் மனிதன், மனத்தெழும் இப் பூதத்திற்குத் தொண்டு செய்வதிலேயே இவனுடைய பெரும்பாகமான வாழ்க்கை வீணாகப் போய்விடுகிறது. சூனிய வாதங்களின் பயங்கரமான பித்தலாட்டங்களுக்குக் காரணம், இயற்கைக்கு மேலானதும், அதன் சட்ட திட்டங்களுக்கு மாறாக நடப்பதுமான ஒரு இழிதகைப் பூதம் உண்டென்ற மூடக் கொள்கையன்றோ? அதேபோல் எல்லாவிதமான மத நம்பிக்கைகளுக்கும், இரண்டு ஜாதிகளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று நல்லது, மற்றது தீயது. இவை இரண்டும், 'தாங்கள் நினைத்தவாறு இப் பிரபஞ்சத்தில் மாறுதல்களை விளைவிக்கவல்லன' என்ற கொள்கையே அடிப்படையாகும். இவற்றுள் ஒரு தேவதையை அகற்றி ஒதுக்கி, மற்றதை வணங்கி வசப்படுத்துவதே எல்லாக் காலத்தும் மனிதனின் பெரு முயற்சியாக இருந்துவந்தது. இதுவே மதத்தின் பரம்பரைச் சரித்திரம். இரு தேவதைகளும் மனிதனை மருளச்செய்து, பெரும் பயத்தை உண்டாக்கியதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. யோசித்துப் படுகுழியில் தள்ளும் பேயின் பூச்சாண்டியும், தெய்வத்தின் கோபமும், ஒருங்கே பயங்கரத்தைத்தான் விளைவித்தன. எப்படியிருந்தாலும், மனிதனுடைய தலையெழுத்து, விதி, எல்லா விதிகளையும், நிகழ்ச்சிகளையும் கடந்த ஒரு தெரியாத தெய்வத்தால் என்றென்றைக்கும் அதன் இஷ்டப்படி நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. இந்த நம்பிக்கையை மனிதன் எடுத்தெறியும் வரை, அவன் தன்னைப் பூதங்களுக்கு அடிமையாகக் கருதவேண்டியதுதான். இந்தப் பூதங்களில் எதுவேனும் அவனுக்கு இம்மையிலாவது மறுமையிலாவது சுதந்திரம் அளிப்பதாகச் சொல்லவில்லை.

இன்னும் எத்தனையோ அறிவாளிகள், ஒருபுறம் தலைவிதி, கர்மம், கடவுளின் விலக்கொணாக் கட்டளைகள், அவனின்றி ஓரணுவும் அசையாது, யாவற்றையும் கடந்து நன்மையே உருக்கொண்ட தெய்வம் என்பவற்றையும், மற்றொருபுறம் சுதந்திர யோசனை, எண்ணித் துணியும் கர்மம், மனிதன் மனங் கொண்ட

வழி நடக்கும் சக்தி, உலகத்தில் காணும் அளவிலாத் தீமை, துன்பம் முதலியவற்றையும் ஒருவாறு இணைத்துப் பிணைத்து ஒருவழிப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம், அந்தோ! விழலுக்கிறைத்த நீர்போல் பெருந்தோல்விகளாகவே போயின. நம்மைச் சுற்றிக் காணும் உண்மை நிகழ்ச்சிகளுக்கு விரோதமான எண்ணங்களை, கொள்கைகளைச் சமரசப்படுத்த எத்தனை எத்தனை முயற்சிகள்! இத்தகைய போலிச் சமரச ஐக்கியத்தை ஒத்துக்கொள்ள மறுப்பவர்களை, நம்பிக்கையற்றவர்கள், நாஸ்திகர்கள், விதண்டாவாதம் செய்பவர்கள் என்று ஏசித் திட்டுகிறார்கள். மதாச்சாரியர்களுடைய முழுப் பலமும் அதிகாரமும், தத்துவ சாஸ்திரிகள், சாஸ்திர விசாரணைக் கர்த்தாக்கள் இவர்களுக்கு விரோதமாகவும், விசாரணைமூலமாக நியாயங்களையும் உண்மைகளையும் கண்டுபிடிக்க முடியும் என்ற கொள்கைகளை அடிப்பதற்காகவும் உபயோகப்படுத்தப்பட்டன. இன்னும் மக்கள் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் நிலைக்களனாகவிருக்கும் அறிவை வேரோடு களைந்தெறிவதற்கு இவர்கள் உதவியை, பலத்தினாலும் மிரட்டுதலினாலும் பெறுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

மனித சிந்தனை, ஏதாவது பயனுடையதாய் இருக்கவேண்டுமானால், சுதந்திரமுள்ளதாக இருக்கவேண்டும். பயத்தினால், மூளை கட்டுப்பட்டுப் போய்விடுவதால், தானாக விசாரித்துப் பொருள்களை ஆய்ந்து முடிவிற்கு வருவதற்குப் பதிலாக, மற்றொருவர் சொல்வதை அப்படியே நடுக்கத்துடன் ஒப்புக்கொள்கிறது. மக்களிற் பெரும்பாலோர், ஒரு சிற்றரசனையோ மன்னனையோ கண்டால், அவனது பாதங்களில் முடிசாய்த்து வணங்குகின்றபொழுது, அவர்களெல்லோரையும் படைத்ததாகக் கருதப்படும் கடவுள் முன்னால், அவர்களது ஆத்மாக்கள் எவ்வளவு கேவலமான இழிவான பயங்கொள்ளவேண்டுமென்று எடுத்துச் சொல்லவாவேண்டும்? இத்தகைய சந்தர்ப்பங்களிலும் நிலைமையிலும், அவர்களுடைய சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏதேனும் மதிப்புண்டோ—விலையுண்டோ?

கிளியைப்போல், சொன்னதைத் திரும்பச் சொல்லும் புதுமை, ஆமாம் என்று எதற்கும் தலையாட்டும் வீரம், இவற்றைத்தான் மத உலகத்திலிருந்து எதிர்பார்க்கலாம். எந்தக் கேள்வி கேட்டாலும், கடவுளைக் காட்டி, வாயை மூடு என்றால், சாஸ்திர ஆராய்ச்சிகள் நடக்க முடியுமா? உலக சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும், நாம் சாவதானமாக விளக்கிக் காட்டிக்கொண்டே போனால், இயற்கைக்கு மேலாய சக்தியின் வலி படைத்த உலகம் குறுகிக்கொண்டே போகிறது; அறிவு உலகம் வளர்ந்துகொண்டே வருகிறது.

தேசங்கள் சிறந்தோங்கி வளர்வதற்கும், சிதைந்துடைந்து வீழ்வதற்கும் 'கடவுள் ஆணை' என்று இனிமேல் எடுத்துக்காட்டுவது திருப்தியளிக்காது. அத்தகைய பதில், அறியாமையையும் அறிவையும் ஒரே படியில் வைப்பதாகும். அது எதற்கேனும், காரணங் காட்டுந் தன்மையை மறுப்பதாகும்.

கடவுள், எதற்காக—எந்தவிதமாக ஆணை செலுத்துகிறார் என்பதைக் கண்டுபிடிப்பதே சாஸ்திர ஆராய்ச்சியென்று எந்த மதவாதியும் சொல்ல முடியுமா? அப்படியானால் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தான்தோன்றித்தனமான நடத்தைகளின் விதியைக் கண்டுபிடிப்பதே சாஸ்திர ஆராய்ச்சியாகும். அளவிடற்கொண்ணாத பைத்தியம் அடங்கி நடக்கும் விதிகளைக் கண்டுபிடிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் இடைவிடா உழைப்பே சாஸ்திர ஆராய்ச்சியாகும்.

தத்துவார்த்தமாகப் பார்த்தால், வாழ்க்கையின் விதிகளை—இன்பம் எய்துவிக்கும் தன்மைகளை—நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளை—நாம் மக்களோடும் பொருள்களோடும் இயங்கும் தன்மைகளை—மனிதன் எதன் உதவியைக்கொண்டு இயற்கையை அடக்கி ஆண்டு, அதன் சக்திகளை உணர்த் தனது மூளைக்கு வேலை கொடுக்கின்றானோ அதனைபெல்லாம் அறிவதே விஞ்ஞான சாத்திரம்.

நம்பால் அன்புபூண்டு நமக்குக் கிருபை செய்யும் ஒரு கடவுள்பால் கொள்ளும் நம்பிக்கை, நமது விசாரணை செய்யும் புத்தியைக் கெடுக்கிறது. கடவுளின் நோக்கங்களுக்கு விரோதமாக ஏன் உழைக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறதா? உங்களில் எவருக்கேனும் உங்கள் சிந்தனையால் அவரது உயரத்தில் ஒரு அடி கூட்ட முடியுமா? இத்தகைய நம்பிக்கையால், மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு, முழு மோசம் போய், நாளை என்ன ஆகும் என்பதை யோசிக்க மறுக்கிறான். தன்னை, எந்த நிமிஷத்திலும் மோக்ஷத்திற்குத் தூக்கிவிடவோ, அல்லது நரகத்திற்குத் தள்ளிவிடவோ கூடிய ஒரு சர்வவல்லமையுள்ள கடவுளின் பாதுகாப்பில் இருந்துகொண்டிருப்பதாக நினைக்கின்ற ஒரு மனிதன், தன்னுடைய உழைப்பினால் ஏதேனும் செய்யக்கூடுமென்ற எண்ணத்தை அறவே விட்டுவிடுகிறான். இந்த நம்பிக்கை மலிந்து கிடக்குமட்டும், உலகம் அறியாமையாலும், மூடநம்பிக்கையாலும், துன்பத்தாலும் நிறைந்தே இருக்கும். இயற்கைக்கு வலிதாய இந்தக் கடவுளின் உதவியைப் பெறுவதற்கே மனிதப் பிரயத்தனமெல்லாம் வீணாகச் செலவழிக்கப்பட்டன. இந்த உண்மையற்ற கடவுளின் பலிபீடத்தில மக்களைக்கூட அநேக ஆயிர வருஷங்களாகப் பலி கொடுத்தனர். அவரைத் திருப்தி செய்வதற்கு, தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் இரத்தத்தைச் சிந்தியிருக்கின்றனர். மதக் கிறுக்குடைய வீரர்கள், தீயின் மத்தியில் நின்று மடிந்திருக்கின்றனர். புரோகிதர்கள், இரத்த வெள்ளத்தில் மூழ்கினர். கிழவர்கள், பரிதபித்து வணங்கினர்; மாதர்கள் மனங்கசிந்துருகி அழுது புலம்பினர். இவர்கள் அநுபவியாத துன்பமில்லை, விளைவிக்காத பயங்கரச் செயல் எதுவும் கிடையாது.

சென்றுபோன நீண்ட இருண்ட வருடங்களிலெல்லாம், மக்கள், நாம் நினைக்க முடியாத துக்கங்களுக்கு ஆளாக இருந்திருக்கிறார்கள். துயரத்தின் மிகுதிப் பாகத்தைப் பலவீனர்களும், அன்புடையவர்களும்

நிரபராதிகளுமே அனுபவித்திருக்கின்றனர், கொடிய விஷமுடைய மிருகங்களைப்போல மாதர்கள் நடத்தப்பட்டிருக்கின்றார்கள். புழுக்களைப்போல குழந்தைகள் மிதித்து நசுக்கப்பட்டிருக்கின்றனர். எண்ணற்ற பீடங்கள் இரத்தம் தோய்ந்திருக்கின்றன. அழகிய நங்கையர் பாம்புகளுக்கு இரையாக்கப்பட்டனர். பல தேசத்தினர், ஒரேயடியாகப்பல நூற்றாண்டுகளாக அடிமை நிலைக்கு ஆளாயினர். எங்கு பார்த்தாலும் எடுத்துரைக்க முடியாத அமளிகள், அநியாயங்கள். இக்காலங்களிலெல்லாம் துன்பமடைந்தவர்கள், கடவுளே கதியென வணங்கி வழிபட்டனர். பஞ்சத்தினால் வாடி வதங்கிய உதடுகள் பிரார்த்தித்தன. ஆனால், கடவுள் செவிடாயும் ஊமையாகவுமே இருந்திருக்கிறார்.

இத் தெய்வங்கள், மனிதனுக்கு என்ன பலனை அளித்திருக்கின்றன? ஒரு கடவுள் உலகத்தைப் படைத்து, பல விதிகளும் ஏற்படுத்தினார். தன் குழந்தைகளையும் பலவீனர்களையும், அறியாதவர்களையும் திக்கற்றவர்களையும், தங்கள் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தைத் தாங்களே நடத்திக்கொள்ளும்படி விட்டுவிட்டு வேறிடங்களில் தனது கவனத்தைச் செலுத்துகிறார்என்று சொல்வது சரியான பதிலாகாது. வேறு ஒரு உலகத்தில் இந்தக் கடவுள், சிலருக்கோ எல்லோருக்குமோ இன்பத்தைத் தருவாரென்பது சரியான விடையாகாது. சர்வ வல்லமையும் ஞானமும் படைத்த ஒரு கடவுள், இதுகாறும் நடந்துகொண்டதைவிட, நல்ல மாதிரியாக இனிமேல் நடந்துகொள்வார்என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? உலகத்தில் எல்லாம் அரைகுறையாகத்தானிருக்கின்றன. யாவற்றையும் கடந்த ஒரு தெய்வம், இவற்றிற்குக் காரணமாக இருந்தால், அது இனிமேல் இவற்றைச் சரிப்படுத்துமென்பதற்கு என்ன அத்தாட்சியிருக்கிறது? சகலமும் தெரிந்த 'ஒரு கடவுள்' மக்களிற் பெரும்பாலோரை இப்பொழுது இங்கே அறியாமையில் ஆழ்த்திக் கஷ்டங்களுக்கு ஆளாக்கியிருக்கிறாரென்றால், அவர்கள் நிலைமையை இனிமேல் சரிப்படுத்திவிடுவார் என்று எப்படி நம்பமுடிகிறது? புதிதாக அவருக்கு சக்திகள் வரப்போகின்றனவா? அவர் இனிமேலா அதிக தயாள குணமுடையவராக இருக்கப்போகிறார்? ஏழைமக்களிடத்துள்ள அன்பு இனிமேல் வளரப்போகின்றதா? சர்வவல்லமையும், அன்பும், அதிகாரமும் படைத்த ஒரு கடவுளுடைய சக்திகளில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா?

பாவம், பிழைத்துப்போகட்டும்!

“ஆபத்து, பேராபத்து வந்துவிட்டது! இந்தச் சமயம் வாளா இருந்தோமானால் சர்வநாசம் சம்பவிக்கும். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். எனவே எல்லோரும் ஒத்துழைக்க வாருங்கள். நான் அழைக்கிறேன், நீங்கள் வாருங்கள். வேதாகம இதிகாசாதி புராணங்கள் என்ற விதைகளைத் தூவி ஜாதி, மதம், கடவுள் என்று மூன்று பெரிய விருட்சங்களை உண்டாக்கிய பரம்பரையில் வந்துதித்த நான் அழைக்கிறேன், நீங்கள் வாருங்கள். மாகாண அமைச்சர் என்ற அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டுள்ள நான் அழைக்கிறேன், நீங்கள் வாருங்கள். எந்த விதமான எதிர்ப்புக்கும் அஞ்சாமல் என்னுடன்வாருங்கள். துப்பாக்கிமுனையால் துரைத்தனம் நடத்த முடியும் இக்காலத்திலும் என்பதை அனுபவவாயிலாக அறிந்த அரசியல் தலைவனும் நான் அழைக்கிறேன், நீங்கள் வாருங்கள். சேலத்திலிருந்து, குன்றத்தூர் வந்து, கல்லக்குடியைக் கண்டு, தூத்துக்குடிவரை பாய்ந்துள்ளது எனது துப்பாக்கியிலிருக்கும் குண்டு. அப்படியிருக்கும்அச்சமேன் என்னுடன் வர—என்னுடன் ஒத்துழைக்க! போவோம் புறப்படுங்கள்! போய்ப் புத்துலகச் சிற்பிகளாம் அந்தப் புல்லர்களுக்குப் புகலிடம் இல்லாமற் செய்வோம். மதத்தை, மாய்க்க 'மதியிலிகள்' சிலர் மார்தட்டி நிற்கின்றனர்! அவர்கள் நிமிர்ந்தால் நாங்கள் (மகவாதிகள்) வீழ்வோம்! இது நிச்சயம்!” என்ற அபயக்குரலையே இப்போது சில காலமாக எங்கு சென்றாலும் எழுப்பி வருகிறார் ஆச்சாரியார்.

“எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்ற ரீதியில் சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது”

என்று சிந்தாகூலப்படுகிறார். எல்லோரும் ஒன்று என்று ஏற்பட்டுவிட்டால் “நம்கதி” என்ன ஆவது என்று ஏங்குகிறார், ஏகலைவனைக் கண்ட பரம்பரையில்வந்தவர். ஏகலைவன்கள் இனி ஏற்படமாட்டார்கள் என்பது அவருக்கு நன்றாகத்தெரிகிறது. தெரியவேதான், தெய்வத்தைத் தலையிலும், ஜாதியை மார்பிலும், மதத்தை மடியிலும் வைத்துக் கொண்டு மாநிலமெங்கும் பவனி வருகிறார்! ஆபத்து வந்துவிட்டது அனைவரும் ஒன்று சேருங்கள் என்ற அபயக்குரலை எழுப்புகிறார்.

வாழ்க்கை ஒரு மரமாம்! அந்த மரத்துக்கு, மதம், வேரும் கிளையும் போன்றதாம்! வேரை வெட்ட, வேண்டியபேர் தயாராகி விட்டனராம்! வேர் வெட்டப்பட்டால் மரம் செத்துவிடுமாம்! எனவே, சேர வாரும் செகத்தீரே என்று சங்கநாதம் எழுப்புகிறார், சங்கநாதத்தால் உண்டவீட்டுக்கு இரண்டகஞ் செய்த அந்த 'உத்தமர்' இருக்கிறாரே—கிருஷ்ணபரமாத்மா—அவர் காட்டிய வழியை உலகுக்குக் காட்டும் இந்த 'உத்தமர்!'

போர்க்களத்தில், அர்ச்சுனன் தனது மூத்த அண்ணனான கர்ணனைத் தன்னிடமுள்ள பாசுபதாஸ்திரத்தால் கொல்ல இருக்கிறான். அப்பொழுது கர்ணன் தான் யார் என்பதை (அதற்குமுன் அறியாத) அர்ச்சுனனுக்கு அறிவிக்க முயலு

கிறான். அந்த முயற்சியை முருகர் தன் முறியடித்து விடுகிறார். அதாவது, கர்ணன் என்ன சொல்லுகிறான் என்பதை அர்ச்சுனன் அறியமுடியாதபடி — அறிந்துவிட்டால் தன்னுடைய எண்ணம் ஈடேறாது என்பதை அறிந்த அந்தப் பார்த்தசாரதியார் தம்முடைய சங்கை எடுத்துப் 'பம்' 'பம்' என்று ஊதவே, அவன் சொல் இவன் காதில் விழவில்லை. அதற்குள் அர்ச்சுனன் அம்பெய்துவிட்டான்—கர்ணன் கீழே கவிழ்ந்துவிட்டான்—கண்ணன் களிப்புக்கடலில் மூழ்கி எழுந்தான். (இது கதை—பாரதத்தில் இருப்பது)

அந்தப் பெரிய 'ஆபத்தை' தடுக்க—அதாவது அண்ணனைத் தம்பி கொல்லும் 'அரிய' காரியத்தைச் செய்துமுடிக்கச் சங்கநாதம் எழுப்பினரே சர்வ வல்லமையும் ஒருங்கே அமையப் பெற்ற அந்த அனந்தசயனன்! அப்படிப்பட்ட சிறந்த பரம்பொருள் காட்டிய வழியைத், தான் கண்டதோடு நின்றுவிடாமல் மற்றவர்களுக்கும் காட்டினரே, இந்த உத்தமர்! இவருக்கும், இப்போது, அவருக்கு ஏற்பட்டது போன்ற ஒரு ஆபத்து ஏற்பட்டு, அதிகார அபயக்குரலை எழுப்பிவருகிறார்.

"வாழ்க்கை என்ற மரத்துக்கு மதம், கிளை வேர் போன்றது. வேரை வெட்டினல் மரம் செத்துவிடும். மதமின்றி வாழ்க்கை இல்லை."

என்று இந்த மறையவர் மனமொடிந்து பேசிவருகிறார். கையாலாகாதவன் கடவுளைக்கட்டி அழுகிறான் என்பதற்கேற்ப, எந்த முறையைக்கையாண்டபோதிலும்தம்மைப் பாதுகாக்க முடியாதென்ற சந்தேகம் ஏற்படவே, அதாவது, தம்மை என்றால், தம்முடையபதவியை எப்படியாவது, இன்னும் சிறிது காலத்துக்காவது நிலைக்கச் செய்யவேண்டுமென்ற பேராசைக்கு இரையாகிய ஆச்சாரியார், கடவுளையும் மதத்தையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியாவது தம்முடைய பதவித் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம் என்று தவியாய்த் தவிக்கிறார். இதைப் பார்க்கும்போது நமக்கே கூடச் சில சமயங்களில் பரிதாபம் தான் உண்டாகிறது. ஒருவர், அதிலும், அரசியல் அரங்கிலே அநேககாலம் அமர்ந்திருக்கும் ஒருவர், இன்னும் அந்த ஆசையை விடமுடியாமல் கஷ்டப்படுகிறார் என்பதை எண்ணும்போது நமக்குமட்டுமென்ன, எவருக்கும்தான் பச்சாதாபம் ஏற்படச் செய்யும். பாபம் பிழைத்துப் போகட்டும் என்று தான் எண்ணத்தோன்றும். ✡

மாற்றார் கோட்டத்திலிருந்து!

'ஒழித்துக்கட்டுவோம்,' எனும் தலைப்பிட்டு காரமடை எனும் ஊரிலிருந்து, சி. ப. பழனியப்பன் எனும் தோழர் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார். தான், அவ்வூர் இளைஞர் காங்கிரஸ் தலைவர் எனவும், அக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஒழித்துக்கட்டுவோம்,' எனத் தோழர் குறிப்பிட்டிருப்பது, ஆச்சாரியாரின் புதுக் கல்வித்திட்டத்தையாகும். அவர், எழுதுகிறார்:—

"ஆச்சாரியார் அவர்களின் ஆரம்பக்கல்வித்திட்டத்தை சர்வகட்சிப் பிரமுகர்களும் காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்பட அறிஞர்கள் பலரும் பொதுவாக பொதுமக்கள் பெரும் பகுதியினரின் எதிர்ப்பும் இருக்கிறது என்பதைத் தெரிந்தும், மீண்டும் அது நகரங்களிலும் புகுத்தப்படுகிறது என்றால் இதைக் கண்டிக்கத்தக்க-ஏன்? ஆத்திரமூட்டத்தக்க-செய்கையாகக் கருதக் கூடாது!

கல்விக்குரிய காலத்தைக் குறைத்து விட்டதை மாபெரும் கல்விப்புரட்சியென்று கூறுவது, மாங்கொட்டையை நாட்டி அடுத்த விநாடியில் கனியாக்கிக் காட்டி பெருமையடித்துக் கொள்ளும் வித்தை காட்டிக்கும், கல்விப் புரட்சி யென்போருக்கும் என்ன வேறுபாடு கூற முடியும்.

இத்திட்டத்துக்கு எதிர்ப்பு வளர, வளர அதற்குக் கூறிய மகாத்மியங்கள் எல்லாம் மறைந்து முடிவில் அதிகம்பேர் கல்வி பெற இதில் வசதியிருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் இந்தத் திட்டத்தால் வசதி பெறும் அத்தனை குழந்தைகளின் அறிவும் ஒழுக்கமும் கெட்டு நாசமாகி விடும் என்று கூறினால் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். ராஜாஜியின் மீது உள்ள பக்தி, அன்பு காரணமாக சிலர் விவாதத்தை விவகாரமாக்கி வெறியோடு பேசவும் எழுதவும், கவிபாடவும் கூடத் தொடங்கி விட்டார்கள். அதோடு காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாடு சீர் குலைந்து விடுமோ என்ற பயத்தாலும் பெரும் பகுதியினர் எதிர்க்காமல் பதுங்கிக் கொண்டும் இருக்கிறார்கள். உண்மையிலேயே இப்படிப் பயந்து பதுங்கிக் கொண்டிருப்பதனால்தான் கட்சி சீர் குலையப் போகிறது. பதுங்கியிருப்போர் அனைவரும் ஒரு நாள் பாய்ந்து வெளியில் வரத்தான் போகிறார்கள். அப்பொழுது மாநில முழுதும் மாபெரும் புரட்சி கிளம்பத்தான் போகிறது.

அப்படிப்பாய்ந்து வருவார்களேயானல் அது, தவறாகக் கருத முடியாது. காரணம் பிரகாசம் மந்திரி சபை இருந்தகாலத்தில் காமராஜரும் ராஜாஜியும் பூர்ண மதுவிலக்கு வேண்டி அப்பொழுதைய சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தினார்கள். அதே சர்க்கார், மில் ஒழிப்புத் திட்டம் கொண்டு வந்ததற்காக சர்க்காரையே மாற்றி அமைத்தார்கள். அதுமட்டு மல்ல, ஆந்திரா காங்கிரஸ்காரர்கள் தனிமாகாணம் கோரி மத்திய காங்கிரஸ் சர்க்காரையெதிர்த்து மாபெரும் நாசப்புரட்சி நடத்தினார்கள். வெற்றியும் பெற்றார்கள். இதிலிருந்து தெரிவது என்ன?

கட்சி, கொள்கை, தேசம், கட்டுப்பாடு ஆகியவைகளின் பெயரால் இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. காரணம், இவைகள் அனைத்தும் மக்களுடைய நன்மைக்காகவே, ஏற்பட்டது. நாட்டுமக்களின் உயர்வுக்கு உயிர் கல்வி. அதைஒருமனிதன் பிடிவாதமாக சர்க்காரையும் ஸ்தாபனத்தையும் காட்டி கல்வியைசித்திரவதை செய்வதென்றால் சிந்திக்கச் சக்தியுள்ளவர்களால் எப்படிசகித்துக் கொண்டிருக்கமுடியும்.

ஆகவே, இளைஞர்கள் அனைவரும் சாதி, மதம், கட்சி கொள்கை அனைத்தும் விடுத்து, இத்திட்டத்தை ஒழித்துக்கட்ட ஒன்று கூடுவோம்" ✡

வெறும் பேச்சலங்காரந்தானா?

[அடிகள்]

★

பல நூற்றுக்கணக்கானவர்களுடைய உயிரைக் குடித்தும், ஆயிரக்கணக்கானவர்களுடைய சதைகளைப் பிய்த்தும், எலும்புகளை உடைத்தும் தனது பசியைத் தணித்துக்கொண்ட கும்பமேளாவும், அதனையொட்டி நடைபெற்ற சம்பவங்களும், அதிகார வர்க்கத்துக்கு மறக்கமுடியாத—மாற்றமுடியாத—மறைக்கமுடியாத ஒரு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது.

இன்றைய அதிகார பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் பண்டித நேரு, ஒரு ஆத்திகரா? அல்லது நாத்திகரா என்பதை நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு, அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

முற்போக்கு எண்ணங்களை வளர்ந்துவரும் இன்றைய நிலையில், "இதனை ஒரு பேச்சலங்காரம் என்றே மக்கள் கருதுவர் என்ற நினைப்போ அல்லது நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், பின்பற்றினாலும் பின்பற்றாவிட்டாலும், இதுதான் என்னுடைய முடிவான — மாற்ற முடியாத கருத்தாகும்" என்பதை இனியும் மறைத்துவைக்கக்கூடாது என்பதாலோ என்னவோ, பண்டிதரின் வாயிலிருந்து. சில சொற்கள்—கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன.

பண்டித நேரு, தம்முடைய இளம் பிராயத்தில், அதாவது அரசியலில் அதிக அளவில் பங்கெடுத்துப் பணிபுரியாத காலத்தில், தம்மை ஒரு முற்போக்குவாதியென்றே தம்முடைய எழுத்தாலும் பேச்சாலும் காட்டிவந்திருக்கிறார். இப்பொழுது புத்தக வடிவில் வந்துள்ள அவருடைய அந்தக்காலக் கடிதங்கள் பல, அவரை ஒரு முற்போக்குவாதியென்றே தெரிவிக்கின்றன. மூடநம்பிக்கைகளை முறியடிக்க முழுப்பலம்பெற்றாகவேண்டும் என்ற துடிதுடிப்பு அவருக்கு அப்போதிருந்ததென்பதை, அக்கடிதங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆனால், அன்றைய பண்டித நேருவோடு இன்றைய பண்டித நேருவை ஒப்பிட்டுப் பார்த்தால், 'அவரா இவர்' என்றெண்ணித் திகைக்குமளவுக்கு, இன்றைய சூழ்நிலைகளால், அவர் மாறியோ மாற்றப்பட்டோவிட்டார் என்பதும் நன்கு தெளிவாகிறது. என்றபோதிலும், சில நெருக்கடியான—தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள்—சந்தர்ப்பங்கள்—கும்பமேளாப் போன்ற சம்பவங்கள், அவரை இன்னார் என்று தெரியும்படியும் செய்துவிடுகின்றன அல்லது அவராகவே அந்த நிலைக்குத் தம்மை ஆளாக்கியும் கொள்கிறார்.

பண்டித நேரு ஒருபுறம் இருக்கட்டும். அவர், தானும் ஒரு முற்போக்குவாதிதான் என்று சமயம் நேரும்போதெல்லாம் சொல்லிக்கொள்வதில் ஒரு தனி விருப்பம் கொண்டவர் — அதில் ஓரளவுக்கு நம்பிக்கையும் கொண்டவர். அவருக்கு முற்போக்கு எண்ணங்கள் உண்டாவதிலோ அல்லது பிடித்தமானதிலோ ஆச்சரியமொன்றும் இல்லை. ஆனால், பழைய முறைகள்—ஏற்பாடுகள் எவையும், எத்துணையும், எந்தக் காரணத்தைக்கொண்டும் மாற்றப்படவோ திருத்தப்படவோ கூடாது—அடாது என்ற தங்கள் அடிப்படை எண்ணத்தை—முடிவை மாற்றக்கூடாது — முடியாது என்றநிலையில் இருக்கும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியவர்களான புருஷோத்தமதாஸ்தாண்டன், கிருபளானி போன்ற பழைமை விரும்பிகளே, முற்போக்குப் பணி செய்வதில் முதல் வரிசையில் நிற்க முன்வருகின்றனரென்றால், இவர்களோடு நேருவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நேரு எந்த மூலை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

*

முன்னாள் காங்கிரஸ் தலைவர் புருஷோத்தமதாஸ் தாண்டன் அவர்கள் ஒரு பழுத்த வைதிகர் என்பதும், சனாதனக் கோட்பாடுகள் சரிந்து போகாமல் பார்த்துக்கொள்வதில் சர்வ ஜாக்ரதையாக இருப்பவர் என்பதும், சனாதனத்தின் தலைமைப்பீடமான இந்துமகா சபைக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதும் நமக்குத் தெரியும். இப்படிப்பட்டவரே கும்பமேளாக் கொடுமைகளைக் கண்டித்ததோடுநின்றுவிடாமல், மேலும் ஒரு படி சென்று, 'மூடநம்பிக்கை என்ற வண்டிக்குப் போடப்பட்டிருக்கும் அச்சாணி போன்றது இந்தக் கும்பமேளா; எனவே, இந்த ஆணியை உடைத்தெறியவேண்டும்; இல்லையேல், வண்டி மேலும்மேலும் ஓடிக்கொண்டிருக்கும்; அந்த வண்டியின் சக்கரங்களுக்கடியில் மேலும் பலர் அகப்பட்டு அரைபட்டுச் சாக நேரிடும்; ஆகையால், அந்த ஆணியை அவசியம் உடைத்தெறிய வேண்டும் என்று ஆத்திரமும்

அழுகையும் வீரமும் விவேகமும் கலந்த குரலில் பேசியிருக்கிறார்.

22–2–54ல் நடைபெற்ற டில்லி மக்கள் சபைக் கூட்டத்தில் பேசிய புருஷோத்தமதாஸ் தாண்டன் அவர்கள்,

"கும்பமேளா, மூடநம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டது. கங்கை நதியில் ஒன்றிரண்டு முழுக்குப் போடுவதன்மூலம், நேராக மோட்சலோகம் போய்விடலாம் என்ற மனப்பான்மையோடு மக்கள் அங்கு செல்கின்றனர். இந்து கலாச்சாரத்துக்கும் மதத்துக்கும் இதனைத் தொடர்புபடுத்த முடியாது. இந்து கலாச்சாரமும் மதமும் அறிவுக்கு ஒத்துவராததெதனையும் ஏற்றுக்கொள்ளாது. ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர், எவராயினும் சரி, அறிவுக்கு ஒத்துவராத எதனையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்பதனை உள்ளத்தில் உறுதியாகக் கொள்ளுதல் வேண்டும்.

இதுபோன்ற மூடநம்பிக்கையை வளர்க்கும் விழாக்களில் மக்கள் கலந்துகொள்ள அரசாங்கம் ஊக்குவித்தல் கூடாதென்பதை எச்சரித்துக் கூறுகிறேன். பெருவாரியாக மக்கள் கூடும் இடங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவது அரசியலாரின் கடமையென்றபோதிலும், இப்படிப்பட்ட மூட நம்பிக்கையை வளர்க்கும் இடங்களுக்கு மக்கள் கூட்டம் சேருவதில் ஊக்கம் காட்டி ஆதரவு தரக்கூடாது. கெட்ட எண்ணங்களில் இருந்தும் மக்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்து கலாச்சாரத்தின் முடிவாகும். அடிமைத்தனத்துக்கு அடிகோலும்மேலை நாட்டு நாகரிக வாழ்க்கை பலவிதக் கேடுதல்களை உண்டாக்குவதுமன்றி, இந்து கலாச்சாரத்தையே பாழ்படுத்திவிடும். மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரமாகத் தன் அறிவு காட்டும் பாதையில் செல்வதுதான் இந்து கலாச்சாரத்தின் அடிப்படையாகும்."

என்று பேசியுள்ளார். மேலேயுள்ள வாசகங்களை (ஒன்றிரண்டு தவிர) படிக்கும் எவரும், இது உண்மையிலேயே புருஷோத்தமதாஸ் தாண்டன் பேசியதா? அல்லது யாரோ ஒரு தன் மதிப்பியக்கத்தவர் பேசியதா என்ற சந்தேகத்தைக் கொள்ளாமல் இருக்கமுடியாது, அந்த அளவுக்கு அந்த உரையில் முற்போக்குக் கருத்துக்கள் அடங்கியுள்ளன.

தோழர் தாண்டன் அவர்களின் இந்தப் பேச்சில், அரசாங்கத்தின் அலட்சியப்போக்கையும், அனாவசியமான—தேவையற்ற காரியங்களுக்கு ஊக்கமளிப்பதையும் கண்டு ஆத்திரமும், மூடநம்பிக்கையின் விளைவாகப் பலர் மடியவும் காயமடைந்து கஷ்டப்படவும் நேர்ந்ததே என்றெண்ணி அழுகையும், தான் ஒரு காங்கிரஸ்காரராக இருந்தாலும், காங்கிரசின் பேரால் நடத்தப்படும் ஆட்சியில் தவறுகள் காணப்பட்டால், அவற்றைக் கண்டிக்கத் தவறமாட்டேன் என்ற வீரமும், கும்பமேளாப்போன்ற அறிவுக்குப் புறம்பான செயல்கள் கலாச்சாரத்தின் பேராலோ அல்லது மதத்தின் பேராலோ நடக்க அனுமதிக்கக்கூடாதென்ற விவேகமும்கலந்திருப்பதைக்காண மகிழ்கிறோம். வைரத்தை வைரத்தாலேயே அறுப்பதுபோல், காங்கிரஸ்காரர்கள்செய்யும் தவறுகளைக் காங்கிரஸ்காரர்களே கண்டிக்கும் தைரியம் ஏற்பட்டதைக் காணும்போது தோழர் தாண்டன்போன்ற காங்கிரஸ் முற்போக்குத் தலைவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில் தவறொன்றுமில்லை. கும்பமேளாக் கொடுமைபற்றிய விவாதம் நடைபெற்ற சமயம் தோழர்கள் கிருபளானியும் தாண்டனும் உண்மையின் அடிப்படையில் நின்று போராடிப் பண்டித நேருவையே தங்கள் வழிக்குக் கொண்டு வந்திருக்கின்றனரென்றால், அவர்களைப் பாராட்டாமல் எப்படி இருக்கமுடியும்?

"கங்கைநதியில் குளித்தால் பாவம் தொலையும் என்று கூறப்படுவதை நான் நம்பவில்லை" என்று நேருவைப் பேசவைத்தவர்களை முற்போக்கெண்ணம் கொண்ட யாரும் தான் பாராட்டுவார்கள். அதிலும் இந்த உபகண்டத்தின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் டில்லிச் சட்ட சபையில்—நாட்டு மக்களின் பிரதிநிதிகள் குழுமியிருக்கும் அந்தப் பொது மன்றத்தில் பண்டித நேரு அவர்களின் போக்கை நிமிர்த்தியவர்களை நாம் உள்ளபடியே பாராட்டுகிறோம்.

"குளிக்கும் விழாவுக்கு மக்கள் போக வேண்டுமென்று ரயில்வே இலாகாத் தூண்டிவிடவில்லை"

என்று, கிருபளானி அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பண்டித நேரு பதில் கூறியிருக்கிறார்.

ஆலமரத்துப் பழத்தைத் தின்ன ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளே வருக! வருக! என்று யாரும் வழி மறித்துக் கூப்பிடுவதில்லை. அவை தானாக வந்து விடுகின்றன. அது போல், கும்பமேளாவுக்குக் கூட்டம் கூட்டமாக வாருங்கள் என்று யாரும் அழைக்கத் தேவையில்லை. கும்பமேளாக் குளிப்பில் குணம் இருப்பதாகத் தெரிந்த—தெரிவிக்கப்பட்டதன் காரணமாக அதில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் எவருடைய அழைப்புமின்றித் தாங்களாகவே அங்குவந்து சேர்ந்துவிடுவர். ஆனால், அப்படி, அவர்கள் அங்குவந்து சேருவதற்கு அரசாங்கம் ஒத்துழைக்கலாமா என்பதுதான் கேள்வி.

கும்பமேளாக் குளிப்பில் நம்பிக்கை இல்லை என்று நம்பும் பண்டித நேரு, தம்முடைய அதிகாரத்தை ஓரளவுக்குப் பயன்படுத்தி சர்க்காரைத் தம் பக்கம் திருப்புவதன் வாயிலாகக் கும்பமேளாப்பற்றிய ஒரு அறிக்கை வெளியிடும் அநுமதியைப் பெற்று, அதில்,

"கும்பமேளாப் போன்ற மதச்சார்பான விழாக்களில் நாட்டின் நாலுபக்கங்களிலும் இருக்கும் மக்கள் இலட்சக் கணக்கில் ஒன்று கூடுவதால், உயிர்ச்சேதமும் பொருள் அழிவும் ஏற்படுகிறதென்பதைச் சர்க்கார் உணர்வதால், அப்படிப்பட்ட விழாக்களில் மக்கள் கூடுவதைத் தடுக்கும் நோக்கத்தை மதச்சார்பற்ற சர்க்கார் என்பதால் மேற்கொள்ளமுடியவில்லை. எனவே, அப்படிப்பட்ட விழாக்களில் மக்கள் கூடுவது கூடாது என்ற வேண்டுகோளை ஜனநாயகத்தை மனதில் கொண்டு இவ்வறிக்கை மூலம் வெளியிடுகிறோம்" என்பதாகக் குறிப்பிட்டு, அதனைப் பெரு

தொகையாக அச்சிட்டு நாடு முழுவதும் பரவும்படி செய்து, அதனால் யாதாயினும் நன்மை உண்டாகிறதா ஏற்படுகிறதா என்ற பரீட்சையையாவது பார்க்கக்கூடாதா? இன்னதேதியில் பிரயாகையில் மதமகத்துவம் பெற்ற கும்பமேளா நடைபெறப் போகிறதென்ற பெரிய பெரிய விளம்பரத்தாள்களை ரயில்வே நிலையங்களிலும் பிற பொது இடங்களிலும் ஒட்டுவதன் வாயிலாக ஆங்காங்கும் இருக்கும் மக்களை ஒன்று சேர்க்கும் முயற்சியை, மேற்படி அறிக்கையை அந்தந்த இடங்களில் ஒட்டுவதன் வாயிலாகத் தடுத்து, மக்களின் மனதை முற்போக்கெண்ணம் கொள்ளச் செய்வதிலாவது இந்த மதச்சார்பற்ற சர்க்கார் முனையக்கூடாதா?

“தேசத்தின் விதியைக், கிரகங்களோ, நட்சத்திரங்களோ, சூரியனோ, சந்திரனோ நிர்ணயிக்கிறது என்ற நம்பிக்கையோ, கங்கையில் குளித்தால் பாவம் போய்விடுமென்ற நம்பிக்கையோ எனக்குக் கிடையாது — இது பற்றி நண்பர் தாண்டன் சொன்னதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன்”

என்று தைரியமாகத் தன்னுடைய கருத்தை வெளியிட்ட பண்டித நேரு, தம்முடைய அதிகார பலத்தைத் துணையாக வைத்துக்கொண்டு ஏன் இந்தச் சிறிய காரியத்தைக் கூட செய்ய முன்வர மறுக்கிறார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. போனது போகட்டும், இனிமேலாவது — இப்படிப்பட்ட அறிவுக்குப் புறப்பான கும்பமேளாக்களும் குடமுழுக்குகளும் நாட்டில் நடைபெறுவதைத் தடுக்கும் தைரியமோ— உரிமையோ — எண்ணமோ இல்லையென்று வைத்துக்கொண்டாலும், அப்படிப்பட்ட இடங்களுக்கு மக்கள் போகக்கூடாதென்ற புத்திமதியையாவது அறிவென்னும் சர்க்கரையோடு சர்க்கார் அதிகாரம் எனும் சிறிதளவு கசப்பையும் கலந்து கொடுக்க முன்வருமா என்று கேட்கிறோம்.

மூடநம்பிக்கையைப் பற்றித் தனது கருத்தைக் கூறிய பண்டிதர் அதற்குச் சிறிது சப்பைக்கட்டுக் கட்டி அதனை நாட்டில் நடமாடவிடவும் பார்க்கிறார்.

“ஏதாவதொரு மூடநம்பிக்கை மக்களுக்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது. சிலருக்கு மத மூடநம்பிக்கை இருப்பது போலவே வேறு சிலருக்கு அரசியல் மூடநம்பிக்கை இருக்கிறது”

என்று கூறுவதன் வாயிலாக மூடநம்பிக்கையின் இருப்பிடத்தை மாற்றவோ மறைக்கவோ முடியாதென்ற வாதத்தைக் கிளப்புகிறார். உடனே, அதனை ஒழித்துக்கட்டவே தாம் (சர்க்கார்) பாடுபடுவதாகவும் கங்கணம் கட்டிப் பேசுகிறார். விஞ்ஞானத்தின் வளர்ச்சி இந்த மூடநம்பிக்கையை முறியடித்துவிடும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவேறு கூறுகிறார். விஞ்ஞான வளர்ச்சி மூடநம்பிக்கையை முறியடித்துவிடும் என்பதை நாமும் மறுக்கவில்லை. ஆனால், இந்திய சர்க்காரால் வளர்க்கப்படும் விஞ்ஞானம் மதத்தால் ஏற்பட்ட மூடநம்பிக்கையை முறியடிக்குமா? முறியடிக்கக் கூடிய முறையில் அந்த விஞ்ஞானம் வளர்க்கப்படுகிறதா என்பதுதான் கேள்வி. பொருளாதாரத் துறையில் இந்த விஞ்ஞானம் ஒரு வேளை உதவியாக இருந்தாலும் இருக்குமேயொழிய, மத மூடநம்பிக்கையை ஒழிக்க இது எந்த அளவுக்குப் பயன்படுமோ—பயன்படுத்தப்படுமோ, நாம் அறியோம்.

மத மூட நம்பிக்கை—இது இந்த நாட்டில் நீண்டகாலமாக இருந்து வரும்—இருக்கும்படி செய்யப்பட்டு வரும் ஒரு அறிவுக்கொவ்வாப் பழக்கத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். இதனைக் களைந்தெறிவது சிறிது கடினம்தான் என்றபோதிலும், தீண்டாமை, கோயில் நுழையாமை போன்ற நீண்டநாள் பழக்கங்களை முறியடித்து பெயரளவுக்காவது வெற்றி கண்டதுபோல் இல்லாமல், உயிர்ச் சேதமும் பொருள் அழிவும் ஏற்படக்கூடிய இந்தக் கொடுமையை ஒழிப்பதில் சர்க்கார் சிரத்தை எடுக்குமானால், பொதுமக்களின் ஒத்துழைப்பு இதற்கு நிச்சயம் உண்டு என்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

இதனை ஒழித்துக் கட்டச் சட்டம் தேவையில்லை—சமாதான நல்லெண்ணப் பிரசாரம்—சர்க்கார் சம்பந்தப்பட்டதாக இருந்தாலே போதும்—எண்ணி ஐந்து ஆண்டுகளில் அல்லது அடுத்த கும்பமேளாவுக்குள், கும்பமேளாப் போன்ற பெரிய பெரிய விழாக்களுக்குக்கூட இப்போது மக்கள் போவதில்லை—போனாலும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் — சர்க்காரின் பணமோ, பொதுமக்களின் பணமோ விரயமாகாத நிலையில் தான் சிலர் போகிறார்கள் என்ற நிலையை நிச்சயம் உண்டாக்கிவிடலாம்.

அரசியல் மூடநம்பிக்கை — இது மதமூடநம்பிக்கையைப் போல் உயிர்ச் சேதத்தையோ, பொருள் அழிவையோ, அறியாமையையோ உண்டாக்கக்கூடியதல்ல. மாறாக, ஒவ்வொரு சமயங்களில், இந்த அரசியல், மூடநம்பிக்கை அமோகமாக இலாபத்தையும் கவுரவத்தையும் கூடத் தந்துவிடுகிறது —சிலருக்கு! இது பொதுவாக நாட்டுக்குநஷ்டத்தையோ கஷ்டத்தையோ அவ்வளவாக உண்டாக்க கூடியதுமல்ல. சில சமயங்களில், இந்த அரசியல் மூடநம்பிக்கை சில அனுமதேயங்களை ஆட்சிப்பீடத்தில் உட்கார வைப்பதன் வாயிலாக, நாட்டுக்குத்தேவையற்ற உதவாத் திட்டங்களை உருவாக்க முற்பட்டு, அவை முறியடிக்கப்படும் நிலையைஉண்டாக்குவதைத் தவிர, பெரிய அளவில்—மத மூடநம்பிக்கையைப்போல் நாசம் விளைவிக்கக்கூடியதல்ல.

மத மூடநம்பிக்கை — அறிவை மங்கச் செய்வது.

அரசியல் மூடநம்பிக்கை — ஒவ்வோர் சமயங்களில் அறிவைக் கூர்மையாக்கியும் விடுகிறது. அந்தக் கூர்மை, அரசியல் என்ற திரை மறைவில் நின்று கொண்டு பலருக்குக் கெடுதல் செய்யவும், அதே சமயத்தில் தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்ளவும் பயன்பட்டுவிடுவதும் உண்டு. இந்த அரசியல் மூடநம்பிக்கை இருக்கிறதே! அது அநேகம் பேரை நல்ல நல்ல பதவிகளில் இருக்கும்படி கூடச் செய்தி

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 28—2—54 [ஞாயிறு

நோக்கம், என்ன?

★

'இண்டிப்பெண்டன்ஸ்' என்ற பிரம்மாண்டமான கப்பலில், 410 யாத்ரீகர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள்—பம்பாய்க்கு. சாமான்யமானவர்களல்ல—பெரும் பணக்காரர்கள்.

பம்பாய் மேயர் டாக்டர் டயாஸ், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எஸ். கே. பட்டீல் ஆகியோர், நல்வரவு கூறி அமோகமாக வரவேற்றிருக்கிறார்கள் அவர்களை.

அமோக வரவேற்புடன் வரவேற்கப்பட்ட இக்குழு, இந்தியாவின் பல இடங்களுக்கும்போய், விஷயங்களை அறிந்துகொள்ள அவாக்கொண்டே வந்து சேர்ந்திருக்கிறது.

இக்குழுவில், பத்திரிகைக்காரர்கள், வர்த்தகர்கள், பாங்கர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரெல்லாம் அடங்கியுள்ளனராம்.

இக்குழு இந்தியாவின் சரித்திர கலாச்சார, வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுமாம்.

யார் இவர்கள்? எந்த ஊர்? ஏன் இவர்களுக்கு அமோக வரவேற்பும், நல்லுரையும்? இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பார்க்க இப்பணக்காரர்களுக்கு பற்றும் பாசமும் ஏற்படக் காரணம் என்ன? அதுவும், இவ்வளவு காலம் ஏற்படாத பற்று—இப்போது!

இந்தியாவின்மீது பரிவும் பாசமும் யாருக்கு ஏற்படும்? இந்தியாவின்மீது எப்பொழுதும் அமோகக் (கண்) காதல் வைத்திருப்பவர்கள்தான் வந்திருக்கிறார்கள். யவரை என்றும் மாலை மரியாதையுடன் இந்திய அரசாங்கம் 'வருக வருக' என வரவேற்புக் கூறி வரவேற்கிறதோ, அவர்கள்தான் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

யார், பாகிஸ்தானில் தங்களுடைய முழுவடிவத்தையும் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்களோ, அவர்களேதான் மாறுவேஷத்தில் இப்பொழுது இந்தியாவுக்கு வர ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த ஆரம்பக் காட்சியின் முதல் பகுதியைத்தான் பம்பாய் மேயரும், பட்டீலும் திறந்துவைத்திருக்கிறார்கள்.

'வெள்ளையனே வெளியேறு' என்ற விடுதலைச்சங்கநாதம் கிளப்பப்பட்டு, விடுதலை வேலை வெகு வேகமாக இங்கு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, யார் இந்தியாவுக்கு வந்து, அப்பரகம் எங்கு அகப்படுகிறது? பொன்விளையும் பூமி எது? எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வெவ்விடம் ஏற்றது என்றெல்லாம் ஆராய்ந்து ஆழம் பார்த்தார்களோ, அவர்களைச் சேர்ந்தவர்களேதான் இப்பொழுது இங்குவந்து இறங்கியிருக்கிறார்கள்? அவர்களுக்குத்தான் நல்வரவு நடைபெற்றிருக்கிறது.

யாருடன், பாகிஸ்தான் உறவு கொள்வதால் பாதகம் விளையும் என்று இங்குள்ளோர் பதைபதைத்துப்பேசுகிறார்களோ, அவர்களையேதான்—அவர்களைச் சேர்ந்தவர்களையேதான் இங்குள்ள அரசியல் அதிபர்கள் அமோக வரவேற்புத் தந்து நல்லுரை பகர்கிறார்கள்.

இப்பொழுது தெரிந்துகொண்டிருப்பீர்கள், இவர்கள் யார் என்பதை!

'பாகிஸ்தானுக்குத் தளவாட உதவி செய்கிறார்கள், அதனால் பாதகம் பல விளையும்' என்று பதைபதைத்து, யார் அந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்கானார்களோ அவர்களேதான்—சாட்சாத் அந்த அமெரிக்கப் பிரமுர்களேதான், இந்தியாவுக்கும் வந்திருக்கின்றனர்.

பாகிஸ்தானுக்கு வந்தவர்கள் — பகைமைக்கு ஆளானார்கள். இந்தியாவுக்கு வருபவர்கள் இனிய வரவேற்புக்காளாகி இருக்கிறார்கள்.

அண்ணன் அடிக்கிறான்; தம்பி அணைக்கிறான்! ஏன்? அடித்த அண்ணன் மீது அடிபட்டவனுக்குக் கோபம் ஏற்படாமல் செய்வதற்கு!

இதுபோலத்தான், பாகிஸ்தான் வந்துள்ள அமெரிக்கர் நிலையும் — இந்தியா வந்துள்ள அமெரிக்கர் நிலையும்!

அரசியல் சூட்சுமம் அறிந்தவர்கள், இதன் உண்மையை உணராமலிருக்கமுடியாது.

பம்பாய்க்கு வந்திறங்கிய இந்த அமெரிக்கக் குழுவை வரவேற்ற பம்பாய் மேயர், "அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள நல்லுறவு, இவர்களின் வருகையால் அதிகமாக உறுதிப்படுகிறது" என்று, தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

ஆனால், அமெரிக்கர் குழுவின் சார்பில் பேசிய ஸ்லேடர் என்பார், "அவர்கள் இங்குள்ள வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் வேறு பல இடங்களையும் பார்வையிட்டு அறிந்துகொண்டு போகும் அவாவுடன் வந்திருக்கின்றனர் என்று கூறியுள்ளார்.

மேயரின் வரவேற்பு உபசாரத்துக்கு, அமெரிக்கக் குழுவின் சார்பில் அளிக்கப்பட்ட பதிலை நன்கு கவனித்துப் பார்த்தால், பாவம்! மேயரின் எண்ணம் நிறைவேறுமா நிறைவேறாதா என்பது சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாகிவிடும்.

அவாவோடு வந்திருக்கிறார்களாம்! பாவம் "......தாகம்" அதிகம் உண்டாகியிருக்கிறதுபோலும்! எனவே அடக்கமுடியாத அவா

வோடு வந்திருக்கிறார்களாம் இவர்கள்.

அன்றும், இப்படித்தான் கூறிக்கொண்டு அவர்கள்—ஆங்கிலேயர்கள்—இங்கு வந்தார்கள். பிறகு நடந்ததென்ன? தண்டவாளங்களைப் பெயர்த்து, தந்திக்கம்பிகளை அறுத்து, தபாலாபீஸ்களைக் கொளுத்தி அவர்களை வெளியேற்ற வேண்டியதாயிற்று. அந்த நிலை மீண்டும் ஏற்படக்கூடாது !என்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

எதற்கெடுத்தாலும், காட்டிக் கொடுப்பவர்கள் நாம் என்ற குற்றச்சாட்டை, நம்மீது சுமத்தும் 'கழிவுகளுக்கு' இந்த உண்மை தெரியாவிட்டாலும், சிறிதளவாவது அரசியல் கண்ணியத்தோடு உலவுபவர்களுக்கு இது புரியாமற் போகாது.

அன்று, அவர்கள் வந்த நோக்கத்தோடுதான், இன்றும் இவர்கள் வருகிறார்கள் என்பதை அரசியல் அரிச்சுவடி தெரியாதவன் கூட அறிந்து கொள்ள முடியும்.

எனவேதான், கனடாப் பிரதமருக்கு விருந்தளித்து உபசரிக்கும் உற்சாகத்தில், இதனை மறந்துவிடாமல்—ஏன், என்ன நோக்கத்தோடு இவர்கள் வந்திருக்கிறார்கள் என்று இந்நாட்டுப் பிரதமர் சிறிதுயோசித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

★

இலக்கியப் பயிற்சி

★

இலக்கண இலக்கியங்களை நன்றாய்ப் படித்த தொழில் நுட்ப அறிஞரும், விஞ்ஞானிகளும், என்ஜினியர்களும், மிகுதியாக வேண்டும். தொழில் நுட்பத் திறமையுள்ளவர்களுக்கு முக்கியமாக வேண்டுவது செம்மையான இலக்கியம் கல்வி.

இலக்கியப் பயிற்சியால் பண்பட்டவர்கள் மற்றவர்களைவிடச் செம்மையாக நினைக்கவும், ஒன்றைப்பற்றி நிதானமாக முடிவு செய்யவும், நல்ல முறையில் ஒன்றை நிர்வகிக்கவும் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை விஞ்ஞான முறையாக ஆராய்ந்து கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தொழில் நிலையங்களிலும் அரசாங்க அலுவல்களிலும்முன்னேற்றமடைய விரும்புவோர் தங்கள் வேலைக்கு வேண்டிய தொழில் நுட்பக் கல்வி பெறுவது மல்லாமல், இலக்கண இலக்கிய அறிவும் பெறுதல் வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய தொழில் நிலையம் சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி நடத்தியது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தொழில் நிலையத்தில் வேலையினின்று நீக்கப்பட்டவர்களும் நூற்றுக்குப் பத்து பேரே வேலைத் திறமையில்லாததற்காக நீக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் குணநலம் இல்லாததற்காக நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதனைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தியவர்கள், குணநலம் அமையப் பெறாததற்குக் காரணம் யாதெனக் கண்டு தெளிவான முடிவு சொல்லியிருக்கிறார்கள். இலக்கண இலக்கியப் பயிற்சி இல்லாததே அதற்குக் காரணமாதலால், அப்பயிற்சி அளிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

இதற்கு முன்னரும் கல்வித்துறை அறிஞர்கள் இவ்வாறு கூறியதுண்டு. ஆயினும், சென்ற பதினைந்து ஆண்டுகளாக எங்கும் தொழில் நுட்ப அறிஞர் அதிகமாக வேண்டியதிருந்ததால், கல்வித்துறை அறிஞரின் கருத்தைக் கவனிக்கமுடியாமற் போய்விட்டது. தொழிற்சாலைகளுக்கும் இராணுவத்துக்கும் தொழில் நுட்ப அறிஞர் வேண்டியதாயிருந்ததால், பல்கலைக்கழகங்கள் விஞ்ஞானிகளையும் என்ஜினியர்களையும் தோற்றுவிக்கலாயின.

பல ஆண்டுகள் சிக்காக்கோ சர்வகலாசாலை அத்தியட்சகராக இருந்தவரும், சமீபகாலத்தில் போர்டு தர்ம ஸ்தாபனத்தின் டைரக்டராக இருந்தவருமான ராபர்ட் எம். உறட்சின்ஸ் இலக்கியக் கல்வி மிகவும் முக்கியம் என்பதைப் பின்வருமாறு வற்புறுத்துகிறார்: "மக்களுக்கு மாண்பளித்துள்ள கருத்துக்களை மாணவர் அறிவதற்குத் துணை செய்வது இலக்கியக் கல்வி. ஒருவன் தானாக ஒன்றை நினைப்பதற்கு இலக்கண இலக்கியக் கல்வி பயிற்சியளிக்கிறது. ஒருவன் தன் ஒப்பற்ற உயர்ந்த ஆற்றலை விருத்தி செய்வதற்கும் அது துணை செய்கிறது."

இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு, கல்லூரி மாணவன் ஒவ்வொருவனும் கலை, இலக்கியம், சமூக நூல் இவற்றை அதிகமாய்ப் படித்தல் வேண்டும்.

நான்கு ஆண்டுகள் கல்லூரியில் பயிலுங்காலத்தில் தொழில் நுட்பத் துறையில் விஞ்ஞானிகளாகவோ என்ஜினியர்களாகவோ பட்டம் பெற வேண்டியவர்கள் எவ்வாறு இலக்கியக் கல்வி பெறமுடியும் என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள தொழில் நுட்ப அறிஞர்கள் அவர்களது தொழிலுக்குரிய கல்வியைவிட இலக்கண இலக்கியக் கல்வியே மிகவும் இன்றியமையாதது என்று உணர்கிறார்கள்.

எனவே, வருங்காலத்தில் தொழில் நுட்ப அறிஞராகவும் தொழில் நிர்வாகிகளாகவும் விளங்கப் போகிறவர்கள் மற்ற நாடுகளின் சரித்திரம், கலை, இலக்கியம் மக்கள் நிலை இவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். அதனால் அவர்கள் தொழில் வளர்ச்சிக்கும் கலாச்சார முன்னேற்றத்திற்கும் அவசியமான சிறந்த தொழில் நுட்ப அறிவும், ஏற்றதிறமை அமைதற்குரிய பயிற்சியும் பெறமுடியும்.

—நார்மன் ஸ்மித்

ஆறுதல்

டாக்டர்-சிற்சபை அவர்கள் துணைவி சரஸ்வதி அவர்களின் தாயார் இராஜம்மாள் 24–2–54-ல் இயற்கை எய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் குடும்பத்துக்கு நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

பாடினது யாருக்கு?

[வெ. சம்பந்தன்]

“நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி”

என்றார் பாரதியார். மனதில் தைரியமில்லாதவர்கள்! நாணயமான நடத்தையில்லாதவர்கள்! மனதில் ஒன்று வைத்துக்கொண்டுவெளியில் ஒன்று சொல்லுகிறவர்கள்! ஆனால், வாய்ப் பேச்சுப் பேசுவதில் மாத்திரம் வீரர்கள்! என்றுவிளக்கமாகக் கூறியிருக்கிறார்.

யாரைப் பார்த்து பாரதியார் இப்படிப் பாடியிருக்கவேண்டும் என்று எனக்கு வெகு நாட்களாகச் சந்தேகம். பக்தி உருவிலே பகல் வேடம் போட்டு, நேர்மைத் திறத்துக்கும் தங்களுக்கும் நெடுநாட் பகைவர்களாக உலவும் மனித உருவங்களையல்லாது, வேறுயாரை அவர் அப்படிக் கூறியிருப்பார்?

உண்மையா பொய்யா என்றுஏன் சந்தேகப்படவேண்டும். கடுகத்தனை கூடச்சந்தேகம் தேவையில்லை. வஞ்சனை சொல்லியே வாழ்க்கையை நடத்தியபடி—நாராயணனை நாவிலே உச்சரித்துக்கொண்டு நாலாயிரம் நாசகாரியங்களைப் புரியும் கண்ணுசாமி போன்ற கயவர்களையல்லாது வேறு யாரையும் அவர் அப்படிக் கூறியிருக்கமுடியாது.

கண்ணுசாமியைப் பற்றி நான் கூறுவதைவிட, கண்ணுசாமியை நீங்களே வந்து பார்த்துவிட்டு உங்கள் அபிப்பிராயத்தைக் கூறுவது நல்லது.

பூக்குடலை கையிலும், புன்சிரிப்பு உதட்டிலும் மேனியெல்லாம் திருநீறும் தாங்கிப் போகிறாரே அதோ, அவர்தான் கண்ணுசாமி. என்ன விழிக்கிறீர்கள்—இந்தப் பெரியமனிதரைப்பற்றியா இப்படிக் கூறினாய் என்றா? சற்றுச் சாந்தத்தைக் கைக்கொள்ளுங்கள். வாருங்கள் அவர் பின்னாலேயே போகலாம்—அதோ யாருடனோ பேசுகிறார். என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்போம்.

“நாளைக்கு வாய்தாங்க, சரியான சாட்சி இல்லையென்று சொன்னால் கட்டாயம் தண்டனை கிடைத்துவிடும் என்று, கட்சிக்கார வக்கீலய்யா சொல்லுகிறார், என்னசெய்வதென்று ஒன்றும் புரியவில்லைங்க.”

“நாற்பது ரூபாய் கொடுத்துவிட்டு போப்பா; நான் பார்த்துக்கொள்கிறேன் — எல்லாக் காரியத்தையும்.”

“வேறே சாட்சியைத் தயார் பண்ணிடுங்கோ—நல்ல ஆளாக இருக்கணும்.”

“நானே வருகிறேன் போதுமா”

“ரொம்ப சந்தோஷங்க! ரூபாய் சாயந்திரம் கொண்டு வர்ரேங்க.”

போதையிலே நன்றாகஒருவனைப் படுகாயப்படுத்திவிட்ட போக்கிரி பொன்னுசாமிக்குச் சாட்சி சொல்லப்போகிறார் — கண்ணுசாமி. படுகாயப்படுத்தினது அவனல்ல, சண்டை நடந்ததாகக் கூறப்படும் அந்த நாளிலே போக்கிரி பொன்னன் ஊரிலேயே இல்லை என்று பொய் சாட்சிச் சொல்லப்போகிறார் இந்தப் பெரியவர்.

அதற்குள் ஆளைக் காணோம்!காற்றாய்ப் பறந்துவிட்டிருக்கிறாரே! என்ன காரணம்?

“அயோக்கியன்! ஆளைப் பாரு, வாட்டசாட்டமா! ஊர் சொத்தில் உடம்பைப் பெருக்கும் ஊதாரிகளுக்கு உடம்பெல்லாம் திருநீறு!”

ஓஹோ! எல்லப்பனைக் கண்டுதான் எடுத்தார் ஓட்டம்போலும்! எல்லப்பனைக் கண்டு — கண்ணுசாமி பூனையைக் கண்ட எலிபோல் ஏன் பாய்ந்தோடிப்போனார் என்பதை நீங்களே எல்லப்பனைக் கண்டு கேளுங்கள்—நான் இங்கேயே இருக்கிறேன்,

“என்னப்பா! யாரைப்பற்றி இப்படிப் பேசுகிறாய்?”

“கொஞ்ச நேரத்துக்குமுன்னாலே போனானே கருங்காலிகண்ணுசாமி, அவனைப்பத்தித்தான்!”

“என்னப்பா! செய்தார், அவர்! ஒரு பெரிய மனிதரை வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுவது தகாது.”

“உருவத்தில்தான் பெரிய மனிதன், உள்ளத்தில் கள்ளமும் கபடமும் கொண்ட கயமைக் குணச் சிறுமதியினன்”

“ஆத்திரப்படாதேப்பா! அவர் என்ன செய்தார்?”

“என்ன செய்தாருங்களா! என் மனைவி படுத்த படுக்கையாகிவிட்டாள். கையிலோ காசில்லை; என் மனைவியின் பொன்சரட்டை இந்தப் பெரிய மனிதனிடம் அடகுவைத்தேன் — டாக்டருக்குப் பணம் தர. போனமாசம் அதை மீட்டுக்கொண்டேன்”

“வட்டி அதிகமாக வாங்கிக்கொண்டாரா?”

“வட்டி, வாங்கிக்கொண்டதைப் பற்றிக்கூடவயிற்றெரிச்சல் இல்லைங்க ஒன்றுக்கு இரட்டையாகத்தான் வாங்கிக்கொண்டான். நம்ம அவசரத்துக்குப் பணம் கொடுத்தானே என்று நான் பேசாமல் கொடுத்துவிட்டேன். அந்த சரட்டில் அரைசவரன் பொன்னைத் திருடிக்கொண்டானுங்க. இந்த ஆஷாடபூதி”

“நகையை வாங்கும்பொழுது உன் நகைதானா என்று பார்த்துத்தானே வாங்கிக்கொண்டு போனாய்?”

“என் நகையையேதான் கொடுத்

தான். நான் என்ன அதை எடை போட்டா திருப்பி வாங்கிக்கொண்டேன். நேற்று அதை விற்கலாமென்று எடுத்துக்கொண்டுபோனால், அரை சவரன் குறைகிறது. சுத்தரித்திர எடுத்துக்கொண்டான், கல்நெஞ்சக்காரன். இவனுக்கு ஒரு நாளைக்கு இந்த எல்லப்பன் நல்ல புத்தி வரும்படி செய்யாமல் போகமாட்டான்''

கேட்டீர்களா கண்ணியவானின் கதையை. ஏழை எல்லப்பனின் நகையிலே திருட்டுவேலை செய்துவிட்டு எல்லப்பனைக் கண்டதும், பூசைக்குப் பூ கூட பறித்துச் செல்லாமல் பாய்ந்தோடிப் பதுங்கிக்கொண்டார், பகல்வேஷக்காரக் கண்ணுசாமி. அவருடைய திருவிளையாடல்கள் இம்மட்டுந்தான் என எண்ணிவிடாதீர்கள் — இன்னும் அனந்தகோடிகள் உள்ளன. அவர் இப்பொழுது நேராக வீட்டுக்குத்தான் சென்றிருப்பார். போகலாம் வாருங்கள். அதோ வீட்டினுள் அவர்தான் பேசுகிறார். யாருடன் என்ன பேசுகிறார் என்பதைக் கவனிப்போம்

"நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தால், அது வாலைக் குழைத்துக்கொண்டு எங்கேயோ செல்லுமாம் என்பதைப்போல நீ இருக்கிறாய். உன்னைக் குற்றம் சொல்லிப் பிரயோசனமில்லை என்னைச் சொல்லவேண்டும்; எல்லாம் என் தலை எழுத்து''

எதிரில் கண்கலங்கி நிற்கும் காரிகை அவருடைய மகள் என்றா கேட்கிறீர்கள்! சே! சே! அவருக்குக் குழந்தைகளே கிடையாது— மனைவி! என்ன திடுக்கிடுகிறீர்கள், மனைவி என்றதும்! இவருடைய வயது எங்கே அந்தப் பெண்ணின் வயது எங்கே, மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாக இருக்கிறதே என்றா? என்ன செய்வது? கண்ணுசாமியின் அகராதிப்படி அது அவள் தலைஎழுத்து! அவள் இவருக்கு மூன்றாம் தாரம்! அவள் என்ன குற்றம் செய்தாள் இப்போழுது என்று கேட்கிறீர்களா? ஒரு குற்றமும் செய்யவில்லை, தெருவைச் சுத்தம் செய்துவிட்டு சற்று நேரம் வாயற்படியண்டை நின்று கொண்டிருந்தாள். அதற்கு இந்த வசவு. இளம் பெண்ணை மனைவியாக்கிக்கொண்ட வயதான கிழவருக்குள்ள வக்கிர புத்தி—சந்தேகச் சூறாவளி–கண்ணுசாமியின் உள்ளத்திலே இருந்ததில் என்ன வியப்பு!

அடுப்பங்கரையண்டை அழுது கொண்டே அந்தப் பெண் ஏதோ கூறுகிறாள்—கவனிப்போம்.

"சற்று நேரம் வெளியே நின்றதற்கு இந்தப் பாபி வாய்க்கு வந்தபடி பேசுகிறான். இவன் செய்யும் அக்ரமத்தை அரைவினாடி எண்ணிப் பார்ப்பதில்லை. எதிர்வீட்டு எல்லம்மாள் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டால், அவளை இவன் பார்ப்பதும், பல்லை இளிப்பதும், பரிகாசம் செய்வதும், பணம் கொடுத்தனுப்புவதும், சாயந்திரம் வருகிறாயா என்று கொஞ்சுவதும் யாருக்குத் தெரியாது. இவனுடைய திருட்டுப்புத்தி, என்னைச் சந்தேகிக்கச் செய்கிறது! இந்தக்கொடியவனை விட்டுத்தொலையும் நாளே என் துக்கம் ஒழிந்த நாள்!''

அந்தப் பெண் பதுமை சொல்வதைக் கேட்டீர்களா? அந்தப் பேபனுக்கு ஒரு காதலி! அவளிடம் அவன் மனைவி எதிரேயே கெக்கலிப்பு! கொஞ்சுமொழி! அதனால் தான்—அவன் வெளியே போகும் போதெல்லாம் அநேகமாக தெருக்கதவை பூட்டிக்கொண்டே சென்றுவிடுவான். 'தான் திருடி எதிரியை நம்பமாட்டான்' என்பது பழமொழியல்லவா?

மன்னியுங்கள் — கண்ணுசாமியின் வேலை என்ன? எப்படிக் காலத்தைக் கழிக்கிறார் என்பதைச் சொல்ல மறந்தே விட்டேனே! தாகு வேலையில் தலைசிறந்தவர்! கோயில் தர்மகர்த்தாக்களின் கையாள்! — உதவி தர்மகர்த்தாபோல உலவுவார் — வட்டி வியாபாரம் — பொய்சாட்சி சொல்வது — இத்யாதி!

காலை மாலை கோயிலுக்குப் போகத் தவறமாட்டார். கோயிலுக்குவரும் பெரிய மனிதர்களை 'காக்காய்' பிடித்துக் கொள்வதில் கெட்டிக்காரர்! 'அய்யாவுக்குப் பிரசாதத்தை கொஞ்சம் வீட்டிற்கு அனுப்பிவிடுங்கள், அய்யரே!' என்று அர்ச்சகருக்கு உத்தரவு போடுவார்—முன்சீப்பு, போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் வந்துவிட்டால்! இவருடைய பணிவான தன்மையைக் கண்டு அந்த உத்தியோகஸ்தர்கள் இவரிடம் பரிவுடன் நடந்து கொள்வர். இந்தப் பரிவை பல வழிகளில் பக்குவமாகப் பயன் படுத்திக்கொள்ளத் தவறுவதில்லை, காரியவாதி கண்ணுசாமி.

கண்களில் கோபம் கொப்பளித்தபடி, கையில் பையுடன் கண்ணுசாமி புறப்பட்டு விட்டார் — ஆம், காய் கறிக் கடைக்குத்தான் போவார். சற்று சிரமம் பாராது அவரைத் தொடர்வோம் வாருங்கள்.

"அயோக்கியப் பசங்க! பேராவர்றவழியிலாகழியைப் போடுவது? நியூசன்ஸ்! திமிர்பிடித்து அலையுதுங்க, அற்பப் பசங்க! இன்னேரம் கீழே விழுந்திருந்தால் என்ன கதியாவது? பெரிய மனுஷனுங்க போகவர வழியேயில்லையே!''

ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்! பெரிய மனிதர், போக்கற்ற போக்கிரிபோல பேசுகிறாரே என்றா? அல்லது எதற்காக இப்படிப் பேசுகிறார் என்றா? அவர் காலடியண்டை ஒரு கம்பு இருக்கிறதே அதுதான் அவர் கோபத்துக்குக் காரணம். அதைத் தாண்டிக்கொண்டு சென்றால் என்ன என்று என்னைக் கேட்கிறீர்களா? பெரிய மனிதர்கள் அப்படிச் செய்வது, தகுமா? தகுதியா? அதுமட்டுமல்லவே! அந்தக் கழியைப் போட்டிருக்கும் காய்கறிக்கடை பச்சை, இவருடைய பரமவிரோதி! காரணம் கேட்கிறீகளா? அந்த ஏழை இவருக்கு எப்படி எதிரியாக இருக்க முடியும் என்று! அவன் சுயமரியாதை இயக்கத்திலே பற்றுள்ளவனாகஇருப்பதே இந்தப்பக்தசிகாமணியின் கோபத்துக்குக் காரணம். அவனைஎப்படியாவது அந்த ஊரை விட்டே ஓட்ட வேண்டுமென்று கங்கணங்கட்டிவிட்டார். பலநாள் பலவிதத் தந்திரங்களைக் கையாண்டு அவனை ஓட்ட முடியவில்லை. இன்று வழியிலே பந்தலுக்குப்பாய்ச்சவேண்டியகழிகீழேகிடந்ததே போதாதா — அவன் மீது

கோபங்கொள்ள! பச்சையைப் போன்ற ஏழைகளைக் காப்பாற்றுவதுதான்பரமனுக்கு இன்பமாயிருக்கும்—என்ற ஆத்திகத் தத்துவார்த்தத்திற்கு நேர்விரோதியான கண்ணுசாமி பேச்சோடு விட்டுவிடுவாரா அதோடு விடுவது அவருடைய அந்தஸ்துக்கே பங்கம் ஏற்பட்டுவிடுமே! பச்சை பரிதாபமாக ஏதோ அவரிடம் கூறுவதைக் கேளுங்கள்.

"இதோ எடுத்துவிட்டேனுங்கோ"

"என்னடா எடுத்துவிடுவது? எத்தனை தடவை நான் உனக்குச் சொல்லி இருக்கிறேன், இந்த இடத்திலே கடையை விரிக்கக்கூடாதென்று! கழுதை! உன் வாலை ஒட்ட நறுக்கிவிடுகிறேன், பார்! கம்பாலேயாடா என்னை அடித்தாய். உன் உயிரை எடுக்கச்சொல்கிறேன், பார்"

கம்பால் அந்த ஏழை எப்பொழுது அடித்தான் என்று கேட்கிறீர்களா? கம்பை வழியில் போட்டுவைத்ததே, அவரை அடித்தாற்போலத்தான். அதுமட்டுமல்ல! அவன் சுயமரியாதைக்காரனாக இருப்பது அவரை அடித்தாற்போலத்தான். அந்த ஏழை பச்சை என்றுவது அவர் வரும்பொழுது நின்று பேசிச் சிரித்துக்கொண்டிருந்தால், இந்தப் பெரிய மனிதன் இளம் பெண்ணை கலியாணம் செய்துகொண்டதைப்பற்றிப் பேசித்தான் சிரிக்கிறான் என்று இவர் செய்துகொள்ளும் கற்பனை அவரை அடித்தாற்போலத்தான்!

அதற்குள் போலீசுடன் வந்துவிட்டார் பாருங்கள்—கண்ணுசாமி. பச்சையை போலீஸ்காரர், சப் இன்ஸ்பெக்டர் ஐய்யா கூப்பிடுவதாக அழைத்துச் செல்லுகிறார்—வாருங்கள், பின் தொடர்வோம்.

கண்ணுசாமி கண்ணீர்விட்டுக் கதறுவதைக் கண்டா, இப்படி மலைத்துப்போய்விட்டீர்கள். அப்படி நடந்தால்தானே பச்சைக்கு சரியான தண்டனை கிடைக்கும். 'பாய்ண்ட்' தெரிந்தவராயிற்றே—கண்ணுசாமி. போலீஸ் விசாரணை நடைபெறுகிறது—கேட்போம்.

"கம்பாலே அடித்ததுமட்டுமல்ல—கத்தியால் குத்தவும் வந்தானுங்க, இந்தப் போக்கிரி! நான் ஓடிவந்திராவிட்டால் என்னைக் குத்தியேவிட்டிருப்பான்"

"என்னடா, உன் அப்பனைப் போல இருக்கும் இவரை ஏண்டா அடித்தாய்"

"நான் அடிக்கலிங்க. என்மேலிருக்கும் குரோதத்தால் இப்படிச் சொல்றாரு"

"நீ, இவருக்குப் பங்காளியாடா உன்பேரில் குரோதம்வைக்க! என்னடா இவருக்கும் உனக்கும் குரோதம்?"

"நான் சுயமரியாதைக்காரன் என்பதே இவருக்கு என்பேரில் இருக்கும் ஆத்திரங்க. நான் இவருடன் எப்பொழுதும் சண்டை இட்டதே கிடையாதுங்க"

"பொய்சொல்றான், போக்கத்த பயல், கோயிலுக்குப்போகுறாடா இந்தக் குள்ளநரி, என்று கண்டபடி என்னை பேசவில்லையடா, நீ! காலையில் என்னைக் கத்தியால் குத்தவரவில்லை! (இன்ஸ்பெக்டரிடம் ஏதோ சொல்கிறார்)

"சரி, உன்பேரில் கேஸ்போட்டிருக்கிறது. அடுத்த 4-ந்தேதி கோர்ட்டுக்கு வந்துவிடு"

நீதியும், சட்டமும் பணம் படைத்த பெரியோர்களுக்குத்தான் என்பதையும், ஏழைக்கு என்றும் எங்கும் தொல்லையும் துயரமும்தான் துரத்தி அடிக்கிறதுஎன்பதையும் அறிந்துகொண்டீர்களா?

அதோ பாருங்கள், கண்ணுசாமி கனஜோராக, சந்தோஷம் தாங்கமாட்டாமல், தான் வெற்றியடைந்தது குறித்து, வேலவனிடம் தன் நன்றியைச் செலுத்த கோயிலுக்கும் போகிறார்.

இப்பொழுது கூறுங்கள், யாரைப் பார்த்துப் பாரதியார், இந்தப் பாட்டைப் பாடினார் என்று.

நேர்மைத் திறமற்ற—வஞ்சனை சொல்லும் நெஞ்சமுத்தக்காரனை—கண்ணுசாமி போன்ற கடவுள் பக்திப் போர்வையைப் போர்த்திக்கொண்டு பொல்லாங்கு புரியும் போலிகளையல்லாது, வேறு யாரைப் பார்த்துப் பாடியிருக்கமுடியும்.

இப்படிப்பட்ட நேர்மையற்றவர்கள்—வஞ்சனைக் கழுகுகள்—இந்த நாட்டில் உலவுவதைக் கண்டு உளம் வெதும்பித்தான் பாரதியார் பாடி இருக்கிறார்.

பாரதியாரை வாயளவில் பாராட்டிப் பேசும் பக்த சிகாமணிகள் இதைக்கண்டு என்றுதான் திருந்துவரோ—அன்றுதான் இந்த நாடு உருப்படும்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கிறதென்பதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். எனவேதான் அரசியல் மூடநம்பிக்கையை விட மதமூடநம்பிக்கை பெருத்த அளவில் நாட்டுக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்குவதோடு, அதனை நம்புபவர்களையே நாசம் செய்யக் கூடியதாகவும் இருக்கிறதென்று கூறுகிறோம்.

அறியாமையைப் போக்கப் பல விதங்களில் நாம் பாடுபட வேண்டும்'' என்று கூறிப் பெருமிதம் கொள்ளும் பண்டித நேரு நாம் கூறும் இந்தயோசனையை ஏற்பாரா? அவர் நினைக்கும் பலவிதங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை என்னவோ நமக்கு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இவையெல்லாம் வெறும் பேச்சலங்காரமேயன்றி, உண்மையாகக் கூறப்படுபவை அல்ல என்று அவர் எண்ணினால், அதற்கு நாம் என்னசெய்ய முடியும்!

தீண்டாமைக்குச் சட்டம் உண்டாக்கச் செய்ததுபோல், கோயில் நுழைவுக்குச் சட்டமியற்றும் நிலைமையை உண்டாக்கியதும் போல் இந்தத் துறையிலும் நாம் இடைவிடாது செய்துவரும் பிரசாரம் என்றைக்காவது ஒரு நாள் வெற்றியை உண்டாக்கித் தரும் என்ற நம்பிக்கையோடு 'தன்கையே தனக்குதவி' என்ற பழமொழியைப் பின்பற்றி நமது, பணியைவிடாது தொடர்ந்து நடத்திவருவோமானால், நாளடைவில் பல கைகள் நமக்கு நிச்சயம் துணைபுரிய நான் நீ என்று முந்திக்கொண்டு முன் வரும்—இது உறுதி.

கலியாண வீட்டு மேளச் சத்தம்!

"உங்களுக்கு அதன் இரகசியம்—தத்துவம்—உட்பொருள் என்னவென்று தெரியாது. எனவே தவறான எண்ணத்தின் அடிப்படையில் சச்சரவு செய்கிறீர்கள். அதைக் கண்டு யாரும் கோபப்படக்கூடாது. அதில் பொதிந்துள்ள உண்மை இருக்கிறதே, அது மெத்தப் பிரமாதம்! நீங்கள் ஹிந்துக்களாய் இல்லாததால், உங்களுக்கு அதன் உண்மை தெரியவில்லை. இதோ நான் ஒரு ஹிந்து. ஹிந்து என்ற முறையில் அவர்களின் சார்பில் அதன் இரகசியத்தை நான் உங்களுக்குக்கூற விரும்புகிறேன்" என்ற அடைமொழிகளுடன், முஸ்லீம் நண்பர்களுக்கு, ஹிந்துக்கள் தங்கள் வாழ்க்கையில் நடத்தும் ஒரு சம்பவத்தின் இரகசியத்தை ஆச்சாரியார் அண்மையில் விளக்கியிருக்கிறார்.

"ஹிந்துக்களின் கலியாணத்தின்போது பிரமாதமாக மேள சப்தத்தை உண்டுபண்ணுவது முஸ்லீம்களின் கருத்துக்கு சிறிது எதிரானது. அதனால் நாட்டில் தொந்தரவு ஏற்பட்டது. இப்போது அந்தத் தொந்தரவு இல்லை என்று நான் நம்புகிறேன்" என்ற பீடிகையோடு, ஆச்சாரியார் தம்முடைய ஹிந்துமதப் பிரசாரத்தை முஸ்லீம் தோழர்களிடையேயும் செய்யத் தவறவில்லை—அப்படிச் செய்யத் தவறுவதே பெரிய தவறு என்ற முறையில் நடந்துகொள்கிறார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஒரு முஸ்லீம் பிரமுகரின் பாராட்டு வைபவத்திற்குச் சென்றிருந்த ஆச்சாரியார், நாம் மேலே தந்துள்ள கருத்துக்களை அவர்களிடையே பரப்பித் தம்முடைய கட்சிக்கு (மதத்திற்கு) பலமும் ஆதரவும் தேட முயன்றிருக்கிறார்.

அந்த முஸ்லீம் பெரியாருக்குப் பாராட்டு விழா நடத்திய இடத்துக்கு அருகாமையில், அதாவது பக்கத்து வீட்டில் ஹிந்துக்களின் கலியாணம் ஒன்று மேளவாத்தியத்துடன் நடைபெற்றதாம். அந்த மேளச் சத்தம் ஆச்சாரியாருக்கு ஒரு தூண்டுகோலாகப் பயன்பட்டு ஹிந்துமதப் பிரசாரம் செய்ய வழிவகை செய்து கொடுத்ததென்று கூறுவதைக்காட்டிலும், இந்தக் காதைக் குடையும், மேளச்சப்தத்தால் அந்த முஸ்லீம் தோழர்கள் ஆச்சாரியார்மீது ஆத்திரமடைந்து, "தாங்கள் இங்கு வருவது தெரிந்தும் இந்த அநாகரிகம் இந்தச் சமயத்தில் நடக்கலாமா—நடக்க அனுமதிக்கலாமா" என்று எங்கே அவர்கள் ஒருவேளை கேட்டுவிடுவார்களோ என்ற அச்சமே, ஆச்சாரியாருக்கு முன்னெச்சரிக்கைபோல் தோன்றியதாலேயோ அவ்விதம் பேசச் செய்ததென்று கூறுவது சாலப்பொருத்தமாகும். ஏனெனில் மற்றவர்களைப் போல் இல்லாமல், ஆச்சாரியாருக்கு எதனையும் முன்கூட்டியறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளும் சுபாவம், அரசியலில் அதிகம் இல்லாவிட்டாலும், மதத்துறையில் நிறைய உண்டென்று அவருடைய நண்பர்களும் அன்பர்களும் கூறக் கேட்டிருக்கிறோம். எனவேதான் முஸ்லீம் பெரியாரைப் பாராட்டச்சென்ற ஆச்சாரியார், பக்கத்துவீட்டு மேளச்சத்தத்தைக் கேட்டதும் முன்னெச்சரிக்கையாகப் பேசியிருக்கிறார்.

"கலியாணத்துக்கு இவ்வளவு சப்தம் எதற்கு? முட்டாள்தனமாக இருக்கிறதே என்று சிலர் நினைக்கலாம். இம்மாதிரி சப்தம் உண்டுபண்ணுவதற்கு ஒரு காரணம் இருக்கிறதென்பதை ஹிந்துக்களின் சார்பில் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்......கலியாணத்தில், தாலிகட்டும் போது அமங்கலமான சப்தம் கேட்காமல் மூழ்கடிக்கவே நாதசுரக்காரர்களும், தவுல்காரர்களும் ஏககாலத்தில் முழக்கம் செய்வது வழக்கம். இது ஹிந்துக்களின் வாழ்க்கை முறை"

என்று கூறியிருக்கிறார். என்றால், சாமர்த்தியமாகப் பேசுவதாகக் கருதிக் கொண்டு, அவ்விதம் வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார். ஹிந்துக்களின் கலியாணத்தின்போது மேளம் அடிப்பதும் நாதசுரம் வாசிப்பதும் அங்கு எழும்பும் அமங்கலச் சொற்களை அடக்கவாம்—காதில் விழாதபடி தடுக்கவாம்! தர்க்க நூல்படித்த வழக்கறிஞர் இவ்வித விளக்கத்தைத் தருகிறார்.

அமங்கலச் சொல்—இதனை உச்சரிப்பவர் யார்? யார் காதில் விழுவதைத் தடுக்க இந்த ஏற்பாடு! கலியாணத்தம்பதிகள் காதிலா? பெற்றோர், உறவினர், நண்பர்கள் காதிலா? அல்லது கலியாணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் காதிலா? அல்லது தெருவில் போவோர் வருவோர் காதிலா என்ற விபரத்தை ஆச்சாரியார் தரவில்லை.

சென்னை ஏஜண்டு

சென்னை நகருக்கு K. T. சம்பந்தம் அண்டு கோ. என்ற விலாசத்தாருக்கு 'திராவிடநாடு' விற்பனை உரிமை தரப்பட்டுள்ளது. மார்ச்சு முதல் வாரத்திலிருந்து, பிரதிகள் தேவைப்படுவோர் K. T. சம்பந்தம் அண்டு கோ, 183. மவுண்ட்ரோடு, சென்னை 2 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

'நிர்வாகி'

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.

தீட்டிய

பொன்னொளி

விலை அணு 4.

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணு தபால் பில்லைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

'பவழ பஸ்பம்' தயாராகிறது!

பரிமளம் பதிப்பகம்

காஞ்சிபுரம்

அமங்கலச் சோல் — இது கலியாண வீட்டில்மட்டும் ஏன் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்த அமங்கலத்தைக் கலியாணத்தோடு தொடர்பு படுத்திப் பேசிய ஆச்சாரியாரின் உள் எண்ணம்தான் என்ன. மங்கலம் நடைபெறும்இடத்தில் அமங்கலம் ஏற்படும் என்ற உண்மையை ஆச்சாரியார் எங்கிருந்து கண்டுபிடித்தார்? ஹிந்துக்களின் வீட்டில் என்று பொதுவாகவே பேசியிருக்கிறார். ஹிந்துக்களில் பார்ப்பனரும் — அல்லாதாரும் இருக்கின்றனர். இந்த அமங்கல ஒலி பார்ப்பனர் இல்லங்களில் அதிகம் ஒலிக்கப்படுகிறதா அல்லது பார்ப்பனரல்லாத பிற வீடுகளில் அதிகம் ஒலிக்கப்படுகிறதா என்ற விபரங்களை அவர் கூறவில்லை. நம் நாட்டைப் பொறுத்த வரையில், ஹிந்துக்களின் முறைகளைப் பின்பற்றும் மக்கள், தங்கள் திருமணங்களை மேளவாத்தியம் போன்ற ஒலிகளோடு நடத்துவதும் இல்லை — அங்கெல்லாம் அமங்கலச்சொற்கள் உச்சரிக்கப்படுவதும் இல்லை.

கலியாண வீட்டில் அமங்கலச் சோல்—இது, இதுவரை எவரும் கேட்டிராத ஒரு புதிர். கலியாண வீட்டில் அமங்கலச் சொல் எழ— அல்லது எழுப்பக் காரணமே இல்லை. கலியாண வீட்டில் எவ்வளவு கூட்டம் கூடிய போதிலும், கலியாண சம்பந்தமான மங்கலச் சொற்கள் தான் எங்கு பார்த்தாலும் பேசுவதை இதுவரைகேட்டிருக்கிறோம். அதிலும் தாலி கட்டும் சமயத்தில் எல்லோரும் வாழ்த்தொலிகளை எழுப்புவரேயன்றி, ஒருபோதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் சாவொலியை அதாவது அமங்கலச் சொற்களை மறந்தும் உச்சரிக்க மாட்டார்கள். ஆனால்ஆச்சாரியார், தாலி கட்டும் சமயமாகப் பார்த்துத்தான் அத்தகைய அமங்கலச் சொற்கள் அளவுகடந்து எழும்பும் என்றும், அதற்காகவே, மேளவாத்தியமும் அந்த நேரத்தில் மட்டும் அதிக அளவில் ஒலிக்கச் செய்வதென்றும் கூறுகிறார்.

ஹிந்துக்களிலும் பார்ப்பனரல்லாத வீடுகளில் நடக்கும் கலியாணத்தின் போது, எந்தவிதமான அமங்கலச் சொற்களும் உச்சரிக்கப்படுவதாக நாம் கேள்விப் பட்டதில்லை எனவே, ஆச்சாரியாரால் குறிப்பிட்டுப் பேசப்படும் அந்த "அமங்கலம்" எங்கே, மேளச் சத்தத்தால் தடுத்து மறைக்குமளவுக்கு ஒலிக்கப்படுகிறதென்பது தெரியவில்லை. இதனையும் ஆச்சாரியார் சிறிது விளக்கினால், சந்தேகத்துக்கு இடமின்றி இந்த அரிய பெரிய ஆராய்ச்சி உண்மையின் உட் தத்துவத்தை அனைவரும் அறிய ஏதுவாகும்.

இருவர் புதிதாக வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ளும் நல் விழாவில், எப்படிப்பட்ட அறிவீனனும் அமங்கலச் சொல்லை உச்சரிக்கமாட்டான் என்பதுதான் நாம் இதுவரை கண்டறிந்த உண்மையும் அனுபவமுமாகும். அமங்கல ஒலியை அடக்கவே ஹிந்துக்கள் தங்கள் கலியாணத்தின் போது மேளக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்கின்றனர் என்றுகூறுவது உண்மையிலேயேஹிந்துமதத்துக்கேஒரு பரிகாரம் தேட முடியாத இழிவாகும். அதிலும் பிறமதத்தவர்களான முஸ்லீம்கள் மத்தியில் நின்று கொண்டு,

> "எங்கள்கலியாணத்தில் அமங்கலச்சோற்கள் அதிகஅளவில் பரிமாறப்படுவது வழக்கம்"

என்று கூச்சமின்றிக் கூறுவது போன்றகேவலம்வேறேதும் இருக்க முடியாது. இந்துக்கள் என்று தங்களைக் கூறிப்பெருமைப்பட்டுக்கொள்பவர்கள் கூட ஆச்சாரியாரின் இந்த வாதத்தை அணுவளவும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அந்தக்கூட்டத்தில் குழுமியிருந்த முஸ்லீம் அன்பர்கள் ஆச்சாரியாரின் இந்தச் சப்பைக் கட்டுவாதத்தைக் கேட்டு என்ன எண்ணியிருப்பார்கள் என்பதை, ஆச்சாரியார் சிந்திக்க மறந்தாலும்—மறுத்தாலும், அவருடைய அதரம்அசைக்கும் ஒவ்வொரு சொல்லிலும் அளவுகடந்த பொருள் நயத்தைக் கண்டு புளகாங்கிதமடையும் அவரது அன்பர்களாவது சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

ஒரு நாட்டை—மாகாணத்தைக் கட்டி ஆளும் பொறுப்பில் இருக்கும் ஒரு மந்திரி, இந்த அளவுக்குத் தம்முடைய மதியை மங்கவைக்கும் முறையில் பேசித் தொலைக்கிறாரே என்பதனையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா? கலியாண வீட்டு மேளச்சத்தம், கெட்ட வார்த்தைகள் பேசுவது பிறர் காதில் விழாதபடி தடுக்கிறதென்றால், சா வீட்டுக் கொட்டு முழக்கு எதைத் தடுக்கிறது என்பதற்கு ஆச்சாரியார் விளக்கம் தரவில்லை—காரணம், அது அவருக்குத் தெரியாது என்பதல்ல. அதற்குரிய காரணத்தைக் கூறுவதற்கான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவில்லை என்று பொருள். அதாவது,ஏதாவதொரு சா வீட்டுக் கருமாமையில் அவர் அழைக்கப்பட்டுப் பேசும் வாய்ப்பு அவருக்

குக் கிடைக்கவில்லை. எனவேதான் அவர் சாவீட்டுக் கொட்டு முழக்கு எதனை அடிப்படையாக வைத்துச் செய்யப்படுகிறதென்பதை இது வரை கூறவில்லை. யாராவது சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தக் காரணத்தையும் அறியும் வாய்ப்புக் கிடைக்கும்!

குட்டிக்கதைகள் கூறுவதில் கெட்டிக்காரர் என்று பெயர் வாங்கிய, ஆச்சாரியார், இத்தகைய குதர்க்க வாதங்களால் தமக்கென இருக்கும் அலாதியான திறமையை எங்கே இழந்து விடுவாரோ என்ற அச்சம் அவரது சகாக்களுக்குள்ளேயே ஏற்பட்டுவிட்டதாக ஒரு வதந்தி உலவுகிறது!

★

புதுவிதப் பாராட்டு!

"சதா சர்வகாலமும் அவர் அதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார். நான் பொய் பேசவில்லை. குறைந்தது முப்பது ஆண்டுகளாகவே எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனவே அவரைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய சிந்தனை முழுவதும் எதில் இலயத்துக் கிடக்கிறதென்பதை நான் நன்கறிந்திருக்கிறேன். ஜனாப்ஜின்னாவின் பாகிஸ்தான் பிரச்னை, நாட்டவர் அனைவரின் கவனத்தையும் இழுத்துக் குழப்பிக்கொண்டிருந்த சமயத்தில்கூட அவருடைய சிந்தனையெல்லாம் அங்கேதான் சென்றிருந்தது. பாகிஸ்தானா? அது பசுவை இரண்டாக வெட்டுவது போல் இல்லையா என்று நான் வீர முழக்கம் செய்தபோதுகூட அவர் அதைப்பற்றி எண்ணியபடியேதான் இருந்தார். வெள்ளைக்காரன் வெளியேறிவிட்டான் — நாடு விடுதலை அடைந்துவிட்டது என்று கூறிய போதுகூட அவர் தம்முடைய சிந்தனை முழுவதையும் அங்கேதான் செலுத்தியிருந்தார். ஏதோ, பார்ப்பவர்களுக்கு, அவர் உலக விவகாரங்களில் ஈடுபட்டவர்போல் தெரிந்த போதிலும், அவருடைய சிந்தனை எல்லாம் இங்கில்லை என்பது பலருக்குத் தெரியாது. பாகிஸ்தான் பிரதமரோடு பேசிப் பகைமை தீர்க்கும் வழி வகைகளைக் காணத் துடிக்கிறார் —இலங்கை முதல்வரோடு பேசி இணைந்து வாழ இயலுமா என்று முயற்சிக்கிறார் — அதோ கனடாப் பிரதமர் வந்தார், அவரோடு எவ்வளவு அன்பாக அளவளாவுகிறார்—பூட்டான் மன்னர் தம்பதிகளை முழு மனதோடு முகமலர்ந்து வரவேற்றுப சரிக்கிறார். நேப்பாளத் தூதுவர் வந்தார் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்—மவுண்ட்பேட்டன் தம்பதிகள் வந்தனர் — மனம்விட்டுப் பேசினார்—இங்கிலாந்து சென்று எலிசபெத்ராணியின் முடிசூட்டு விழாவைத் தரிசித்தார்—வடநாட்டு மலைஜாதியினரை மாநாகரிகம் படைத்தவர்கள் என்றார் — தென்னாட்டுத் திராவிடர்களைக் காட்டுமிராண்டிகள், அறிவில்லாதவர்கள், சிறுபிள்ளைகள் என்றார்—டில்லிப் பார்லிமெண்டிலுள்ள எதிர்க்கட்சிக்காரர்களை நாகரிகமற்றவர்கள் என்றார்—கொச்சி—திருவாங்கூருக்குச்சென்று கோவெனக் கதறி என்னை (காங்கிரசாரைக்) காப்பாற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டார்— பெப்சுக்குச்சென்று அங்குள்ளவர்களின் பிரியத்தை நாடினார்—கும்பமேளாக் 'குதூகலத்தில்' கலந்துகொண்டார் — என்ற இவைபோன்ற பல பிரச்னைகள்—பிரியமான செயல்கள் — விவகாரங்கள் — தொல்லைகள் ஆகியவற்றில் பங்கெடுத்துக்கொள்கிறார் என்றபோதிலும் அவருடைய சிந்தனை முழுவதும் என்னவோ அங்கேதான் பதிந்து கிடக்கிறது. இந்த உண்மை எனக்குத்தான் தெரியும்: எதில் அவருடைய சிந்தனை முழுவதும் ஆழ்ந்து கிடக்கிறதோ, அதைப்பற்றி அவர் வெளியே ஏதும் பேசவதுகிடையாதென்று நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால், உண்மை என்னவோ அதுதான்"

என்ற இந்த நற்சாட்சிப் பத்திரத்தை மாநில அமைச்சராம் ஆச்சாரியார், மண்டில அமைச்சராம் பண்டிதநேரு அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

நற்சாட்சிப் பத்திரம் எதைப்பற்றியது என்று கேட்கத் தோன்றும் எவருக்கும். இதோ அந்த அரும் பெரும் உண்மையையும் கூறிவிடுகிறேன்.

"நமது பிரதம மந்திரி நேரு, மதத்தைப்பற்றிப் பேசுவதில்லை. ஆனால், அவர் மனதில் எப்போதும் பகவானின் மாயாவிநோதங்கள்பற்றிய சிந்தனையே குடிகொண்டிருக்கிறது."

இதுதான் அந்த சர்டிபிகேட்டின் சுருக்கம். நான் மேலே தந்திருப்பது அதன் விளக்கம்.

12—2—54ல் சென்னையிலுள்ள உட்லண்ட்ஸ் ஓட்டலில், அலிகார் பல்கலைக் கழகக் கண்காணிப்பாளர் டாக்டர் சைபுதீன் அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதில் சென்னை மாநில மந்திரி இராசகோபாலாச்சாரி அவர்களும் கலந்துகொண்டார். டாக்டர் சைபுதீனைப் பாராட்டப் பலர் வந்திருந்

புண்ணிய நாடு

புண்ணிய நாடென்று சொலும்
இந்த நாட்டில்
புழுப்போல துடிக்கின்றார்
ஏழைமக்கள்!
கண்கொண்டு பார்ப்பதற்கோ
சகிக்கவில்லை!
கதியற்றே நிதியற்றே
வறுமையுற்றே
புண்மனத்தால் வாடுகின்றார்!
அந்தோ, இந்தப்
புவிதனிலே வேறெங்கு
மிதுபோற் காணேன்!
எண்ணமெலாம் 'என்செய்
வோம்?'
என்பதாகும்;
இடிகின்றார் மனத்துயரால்
நலிகின்றாரே!

தி. மு. கழகப்
பொதுக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 7—3—54 ஞாயிற்றுக்கிழமை யன்று, திருச்சி, பார்த்தசாரதி பயிற்சிக் கல்லூரி (கருணாநிதிப் பூங்காவில்) மண்டபத்தில் நடைபெறும்.

சென்னை
28—2—54

அண்ணாதுரை
பொதுச் செயலாளர்.

தனர். அவர்களில் சர் உஸ்மான் அவர்களும் ஒருவர். சர் உஸ்மான் டாக்டர் சைபுதீனைப் பாராட்டியதோடு நிற்கவில்லை. இரண்டொரு வார்த்தைகள் டாக்டர் சைபுதீனைப் பற்றிக் கூறிவிட்டு, அவரைப் பாராட்ட வந்த ஆச்சாரியாரைப்பற்றியே அதிக அளவில் பாராட்டிப் பேசியிருக்கிறார். சர் உஸ்மான் அவர்களின் பேச்சைப் பத்திரிகைகளில் படிக்கும்போது, அவர் யாரைப் பாராட்டுகிறார்? டாக்டர் சைபுதீனையா? ஆச்சாரியாரையா? என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு அவர், ஆச்சாரியாரைப்பற்றியே அதிகமாகப் பாராட்டிப் பேசியுள்ளார் என்பது நன்கு தெரிகிறது.

"மதப்பற்றும் கடவுள் நம்பிக்கையும் குறைந்துவரும் இக்காலத்தில் மதத்திற்காக மகத்தான சேவை செய்து வருகிறார்—இது மிகவும் அவசியம்."

என்று ஆச்சாரியாரை சர் உஸ்மான் பாராட்டுகிறார். இந்தப் பாராட்டுதலுக்குப் பதில்தான் மேலே உள்ள நற்சாட்சிப் பத்திரமாகும். நேருவுக்கு நற்சாட்சிப்பத்திரம் அளிப்பதன் வாயிலாக, ஆச்சாரியார் தம்முடைய முழுநேர மதப்பிரச்சார உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"நான் எப்போதும் மதத்தைப் பற்றியே பேசுகிறேன் என்று சர் உஸ்மான் கூறுகிறார். ஆனால், சில சமயங்களில் மதத்தைப்பற்றிப் பேசாதவர்களும் உண்மையாகவே மதப்பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள்"

என்று கூறிப் பண்டிதநேருவுக்கிருக்கும் மதப்பற்றின் மகத்துவத்தை மன்பதைக்குவிளக்குகிறார்.

பண்டித நேருவுக்கு மதப்பற்றுதல் இருக்கிறதா? இருந்தால், அது, அவருடைய மனசுக்குள் இருக்கிறதா? அல்லது வெளியே தெரிகிறதா? என்று யார் இவரை (ஆச்சாரியாரை) கேட்டார்கள்? டாக்டர் சைபுதீன் அவர்களைப் பாராட்டச் சென்றவர், பண்டித நேருவை ஏன் பாராட்ட வேண்டும்? சர் உஸ்மான் ஆச்சாரியாரைப் பாராட்ட. ஆச்சாரியார் பண்டிதரைப் பாராட்ட, உண்மையாகவே பாராட்டுதலைப் பெற வந்திருந்த டாக்டர் சைபுதீன், அவர்கள் மத்தியில் நின்று அவதிப்பட நேர்ந்ததைக் காணும் எவருக்கும் இது என்ன ஒரு புதுவிதமான பாராட்டு விழாவாக இருக்கிறதே என்றுதான் எண்ணத் தோன்றும்.

★

'நமது இலட்சியம்'

திராவிட பார்லிமெண்டரி கட்சிக் கூட்டம் சென்னையில் 23—2—54 அன்று தோழர் எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் தலைமையில்கூடிபலசெயல் முறைத்திட்டங்களைவகுத்துள்ளது. முதல் திட்டமாக நமது இலட்சியம் ஒலித்திருக்கிறது. திராவிடநாடு அடையப் பாடுபடுவதே தமதுகுறிக்கோள் என முழங்கியிருக்கின்றனர். திராவிடநாடு என்று குறிப்பிடுவது தமிழ், கேரளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு பிரதேசங்களும் அடங்கியது எனவும் கூறப்பட்டிருக்கிறது. திராவிடநாடு என்பதே புரியவில்லையென்று ஓலமிடும் இன்றைய அரசியல் பெரும் புள்ளிகளுக்கும் புரிகிற விதத்தில் விளக்கியுள்ளார்கள். திராவிடநாடு மாற்றார் பிடியினின்றும் விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கை இன்று எங்கும் நீக்கமற நிறைந்து விட்டது. பட்டிதொட்டிகளிலும், பாராளுமன்றங்களிலும் கூட நம் குரல் மிக மிகத் தெளிவாகக் கேட்க ஆரம்பித்து விட்டது. நம் இலட்சியம் அண்மையிலேயே பலனளிக்கும் என்பதின் எடுத்துக்காட்டே இந்த தித்திக்கும் செய்தியாகும்.

மேலும் உடனடித் தேவையான திட்டங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஜாதி ஒழிப்பு, திராவிட கலை மொழி, கலாசாரப் பாதுகாப்பு, அபிவிருத்தி, என்பனபோன்றகுறிப்பிடத்தக்கவைகளும், மற்றும், மலைஜாதியினர், பிற்பட்ட வகுப்பினர் அபிவிருத்தி, இலவசக் கட்டாயக் கல்வி, பிச்சைஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு, மைனாரிடிகள் பாதுகாப்பு, மதுவிலக்கு சட்டம் பரிசீலனை ஆகியவைகளும்வேறுபலவும் திட்டமாக்கப்பட்டிருக்கின்றன.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.